விலை ரூபா: 15.00

நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 03 சனிக்கிழமை (16.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கை குறித்த கொள்கையை வகுக்குமாறு ஒபாமாவிடம் வலியுறுத்தல்



(நியூயோர்க்)

இலங்கையின் ஜனநாயகம், மனிதவுரிமைகள், சட்டத்தை நிலைநாட்டுதல், பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு ஆகியன தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும் என அந் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் மைக்கல் கிறிம் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பசிலிடம் அதிகாரம் கையளிக்க இந்தியா- சீனா விருப்பம்?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது தம்பி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான மோதல் கடுமையாக உக்கிரமடைந்துள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியானதன் பின் இருவருக்கும் இடையிலான மோதல் இன்னும் தீவிரம் பெற்றுள்ளதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இருவரும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்ச்சையில் சிக்கிக்கொண்டுள்ள நிலையில் அவர்கள் இருவரையும் அதிகாரத்திலிருந்து தற்காலிகமாக அகற்றி, இலங்கை தொடர்பான மேற்கத்தைய நாடுகளின் அணுகுமுறையில் மாற்றம் கொண்டுவர இலங்கையுடன் மிக நெருக்கமான இரண்டு வல்லரசு நாடுகள் விருப்பம் கொண்டுள்ளன.

அவ்வாறு இருவரையும் அரசியல் அரங்கிலிருந்து தற்காலிகமாக அகற்றும்போது அவர்களின் அடுத்த தெரிவாக இருப்பது அமைச்சர் பசில் ராஜபக்ஷ என்றும் தகவல்கள் வெளியாகி யுள்ளன. அவர் இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## மின்கம்பத்துடன் மோதி விபத்து; மோ.சைக்கிளில் சென்ற இளைஞன் பலி

### மற்றொருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)


வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்திலிருந்த மின் கம்பத்துடன் மோதியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததோடு மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் வல்லை புறாப்பொறுக்கிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சண்டிலிப்பாய் வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த தேவபாலன் தேவமைந்தன் (வயது- 23) என்பவர் உயிரிழந்ததோடு கரணவாய் வடக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் விஜயரட்ணம் (வயது-32) என்பவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நெல்லியடியி (20ஆம் பக்கம் பார்க்க)



புறாப்பொறுக்கியில் வீதி விபத்துக்கு உள்ளான மோட்டார்சைக்கிள்.

## ஆட்கடத்தலில் ஈடுபட்ட மூவர் மாட்டிக் கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

ஆட்கடத்தல் மற்றும் பண மோசடி என்பவற்றில் ஈடுபட்டு வந்த மூவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் உடுவில் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டனர்.

சங்கானையைச் சேர்ந்த புடைவைக் கடை உரிமையாளரான அப்புத்துரை அற்புதராசா என்பவரிடம் 30 ஆயிரம் ரூபாய் பணமோசடி செய்ததோடு அவரையும் அவரது கடையில் பணிபுரியும் ராசதுரை சுதர்சன் மற்றும் முன்புறத்திலுள்ள கடையின் உரிமையாளரான வசந்தரூபன் ஆகிய (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவுக்கு எதிராக கருத்து வெளியிடும் எதிர்க் கட்சியினருக்கு ஒரு கோடி ரூபாய்!

### ஜனாதிபதி மகிந்த பணிப்பு?



(கொழும்பு)

ஐ.நா. அறிக்கைக்கு எதிராக கருத்து வெளியிடும் எதிர்க் கட்சியினருக்கு ஒரு கோடி வரையிலான நன்கொடை வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என தகவல்கள் கசிந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

வன்னி இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 திகதி நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தனது அறிக்கையை பான் கீ மூனிடம் கையளித்துள்ளதுடன் அரசாங்கத்திற்கும் இதன் (20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அண்மிக்கும் வரை வாக்காளர்கள் பதிவு

### சர்வகட்சி விசேட குழு பிரேரணை

(கொழும்பு)

தேர்தல் சீர்திருத்தங்களுக்கான சர்வகட்சி விசேட குழு பல முக்கிய திருத்தங்களை பிரேரித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல்களுக்கு இயன்றளவு அண்மித்த திகதிவரை வாக்காளர் பட்டியலைத் தொடர்ச்சியாக புதுப்பிக்க ஒழுங்கு செய்யவேண்டும் என்ற ஆலோசனை இதில் முக்கியமானது.

இப்போது நாம் முந்திய வருட வாக்காளர் பட்டியலையே பயன்படுத்துகின்றோம். பிரேரிக்கப்பட்ட புதிய முறையின்படி தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னரும் ஒருவர் தன்னை வாக்காளராக பதிந்து வாக்களிக்க முடியும். இது கூடிய ஜனநாயகத் தன்மை நிறைந்தது என குழுவின் தலைவரான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கூறினார்.

ஒவ்வொரு வேட்பாளரும் தனது வேட்பு மனுவுடன் பொலிஸின் தடைவிலக்குச் சான்றையும் சமர்ப்பிக்கவேண்டும் என்பது இன்னொரு முக்கிய பிரேரணை (20ஆம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!



எங்கள் பெருமையை நாங்கள் அறிவோம்

எதிர்வரும் திங்கட்கிழமை 18.04.2011 முதல் உங்கள் வலம்புரியில்

பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதும்

இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்

வாசிக்கத் தவறாதீர்கள்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation



என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# கடலில் தத்தளித்த மியன்மார் மீனவர்கள் மீட்பு

(கொழும்பு)

நடுகடலில் தத்தளித்த மியன்மார் மீனவர்கள் சிலரை இலங்கை மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இலங்கை மீனவர்கள் கடலில் தத்தளித்த மியன்மார் மீனவர்கள் 12பேரை காப்பாற்றியுள்ளதாக இலங்கை கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளாா.

கடற்படையின் ஆலோசனையின்படி மியன்மார் மீனவர்கள் இலங்கை அழைத்து வரப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். இன்று இந்த மீனவர்கள் திருகோணமலை துறை முகத்தை சென்றடையவுள்ளனர். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து இரத்த வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி தாரணி குருபரன் அறிவித்துள்ளார்.

எனவே இரத்ததானம் செய்யும் குருதிக் கொடையாளர்கள் மற்றும் புதிதாக இரத்த தானம் செய்ய விரும்பும் குருதிக் கொடையாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு சமுகம் கொடுத்து இரத்தானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

# அறிக்கைகளைப் படிக்க நேரமில்லை பாதுகாப்புச் செயலர் விளக்கம்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் மனித உரிமைகளை மீறியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து அரசாங்கம் ஒருபோதும் கவலைப் படபோவதில்லை என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அரச ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது அரசபடைகள் மனித உரிமை சட்டங்களுக்கு அமையவே செயற்பட்டிருந்தனர்.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் எதையும் அரசாங்கம் மறைக்கவில்லை.

நாட்டை மீளக்கட்டியெழுப்புதல் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல் என்று அரசுக்கு பல்வேறு முக்கிய வேலைகள் உள்ளன.

இந்த நிலையில் அனைத்துலக மனித உரிமை அமைப்புகளின் பொய்யான குற்றச் சாட்டுக்கள் அடங்கிய அறிக்கைகளைப் படித்து கொண்டிருக்க எனக்கு நேரமில்லை.

இது போன்ற அறிக்கைகள் காலத்துக்கு




காலம் வருவதுதான் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

## பொறுப்புடைமைச் செய்முறையில் பங்குபற்றுங்கள் - அரசாங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து பொறுப் புடைமைச் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்தை தான் ஊக்குவிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பொறுப்புடைமைச்செயற்பாட்டில்பங்குபற்றுவதற்கும் அத்துடன் (ஐ.நா) நிபுணர் குழுவின் நிபுணத்துவ அறிவைபயன்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தை நாம் ஊக்குவிக்கிறோம் என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மார்க் டோரனர் தனது நாளாந்த செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவும் நல்லிணக்க ஆணைக்குழுவும் சிறந்த படி நிலைகள் என நான் கருதுகிறேன். ஆனால் ஐ.நா. நிபுணர் குழுவும் பயனுள்ள சொத்தாகும் அரசாங்கம் அதன் சாதக தன்மையை பெற்றுக்கொள்ள வேண்டும் என மார்க் டோரனர் தெரிவித்துள்ளார் (ச-5)

# மன்னார் பிரதேச செயலர் மீதான தாக்குதலுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்



(மன்னார்)

மன்னார் பிரதேசச்செயலாளர் திருமதி ஸ்ரானிலி டிமேல் கடந்த புதன் கிழமை மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் மிகவும் வேதனைக்குரிய விடயம் எனவும் மேற்படி நாகரிகமற்ற செயற்பாட்டில் ஈடுபட்ட அனைவரும் உடன் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் இச்செயற்பாட்டிற்கு எதிராக ஜனநாயக ரீதியான வெகுஜன போராட்டத்தினை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி கடந்த புதன்கிழமை காலை 6.30 மணியளவில் மன்னார் மாவட்டச்செயலகத்திற்கு முன்பு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் தலைமன்னார் வரையிலான சைக்கிள் ஓட்டப்போட்டியில் புதுக்குடியிருப்பால் சென்று கொண்டிருந்த போட்டியாளர் ஒருவர் கழுதை குறுக்கால் சென்றுள்ளதன் காரணத்தினால் கீழே விழுந்துள்ளார்.

ஆனால் அவரை ஏனையவர்கள் தட்டி விட்டதாக எண்ணி புதுக்குடியிருப்பு கிராமத்தினைச் சேர்ந்த சுமார் 300பேர் வரை வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதோடு அப்பகுதியால் வந்த ஏனைய ஆண் பெண் வீரர்களும் அக்கிராம மக்களினால் கன்மூடித்தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

இது மட்டுமன்றி சைக்கிள் ஓட்டப்போட்டியை தொடர்ந்து நடத்தவிடாமல் வீதிக்கு குறுக்கால் மரங்களை போட்டு வீதித்தடையை ஏற்படுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக சம்பவமறிந்த மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமேல் சம்பவ இடத்திற்கு சென்று நிலைவரத்தினை கட்டுப்படுத்த முயன்றுள்ளார். இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமேல் மீது அப்பகுதியில் வன்முறையினைத் தூண்டிய குழுவொன்று கண்மூடித்தனமாக அவரை தாக் கியுள்ளனர்.

இதன் போது சம்பவம் நடந்த இடத்தில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இருந்து வேடிக்கை பார்த்துள்ள போதும் நிலை வரத்தினைக்கட்டுப்படுத்த முயற்சி எடுக்கவில்லை.

அதன்பின்னர் பொலிஸார் ஒருவர் தாக்கப்பட்டதை அடுத்தே அவர் வாகனத்தில் இருந்து இறங்கி செயற்பட்டுள்ளார். எனினும் மேற்படி சம்பவம் இன ஒற்றுமையை சீரழிப்பதற்காக மேற்கொள்ளப்பட் விடயமாக காணப்படுகின்றது.

ஸ்ரான்லி டிமேல் ஒரு பெண் பிரதேசச் செயலாளராக இருந்து மாவட்டத்திற்கு தொடர்ந்து பல்வேறு சேவைகளினை மேற்கொண்டு வரும் நிலையில் மேற்படி சம்பவம் மனவருத்தத்திற்கு உரியதானதாக உள்ளதோடு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்படாவிட்டால் ஒரு சில தினங்களில் மன்னார் மாவட்டத்தில் ஜனநாயக ரீதியான வெகுஜன போராட்டம் நடத்தப்படும் என செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## கண்ணீர் அஞ்சலி

### இராமன் தம்பிப்பிள்ளை



இராமன் தம்பிப்பிள்ளை அவர்கள் 14.04.2011 அன்று மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அண்ணாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

K.விஜயகுமாரனும் சகோதரர்களும்
V.மயில்வாகனமும் ,,
K.சேனாதிராஜாவும் ,,
T.திவாகரனும் ,,
(4498) S.கிருஷ்ணானந்தனும் ,,

**வல்லைவீதி சங்கானை அருள்மிகு பாலவைரவர் ஆலய புனர்நிர்மாணப் பணிக்காக 14.04.2011அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு.**

1-ம் பரிசு இலக்கம்- 3535
2-ம் பரிசு இலக்கம்- 2035
10 ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுதல் பரிசு | 1- 1164 | ஆறுதல் பரிசு | 6- 4919 |
| ,, | 2- 7030 | ,, | 7- 3466 |
| ,, | 3- 5316 | ,, | 8- 0602 |
| ,, | 4- 1881 | ,, | 9- 3578 |
| ,, | 5- 3523 | ,, | 10- 4539 |

- பரிபாலனசபை. (4499)

## காணி விற்பனை

மானிப்பாய் வீதியில் ஒட்டு மடத்திற்கும் ஆறுகால் மடத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 17 1/2பரப்பு காணி விற்பனைக்குண்டு.

T.P: 0217903585,
(4468) 0777393653

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

தமிழ்மதி சனசமூக நிலையத்தின் கட்டிட வளர்ச்சிக்காக நடத்த இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் 04.06.2011 (சனிக்கிழமை) அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்
தமிழ்மதி சனசமூக நிலையம்
மந்திரிமலை, புத்தூர் வடக்கு.
(4497)

# இன்று ஒரு தகவல்

## இளவரசரின் பணிவு

ஒரு பெரிய காடு.அந்தக் காட்டின் மத்தியில் ஒரு ஆச்சிரமம். அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் பல இடங்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கு பாடம் கற்பித்து வந்தார். ஏழை-பணக்காரர் என்ற வேறுபாடில்லாமல் எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பி வைத்தார்கள். அரசரின் பிள்ளைகள் கூட அவரிடம் தான் படிக்கவருவார்கள்.

மாணவர்கள் அனைவரும் அங்கேயே மாதக்கணக்கில், வருஷக்கணக்கில் தங்கியிருந்து பாடம் கற்றுக் கொள்வார்கள். முனிவராகப் பார்த்து நீ போகலாம் என்று சொல்கிற வரையில் மாணவர்கள் அங்கேயே இருக்க வேண்டும் .படிக்க வேண்டும். குருகுலவாசம்.

ஒரு சமயம் ஒரு ராஜகுமாரனும் அவரிடம் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு பதினைந்து வயதிருக்கும். சில வருடங்களுக்குப் பின்னர் அந்த முனிவர் தன்னிடம் இருந்த மாணவர் களுக்கெல்லாம் பரீட்சை வைத்தார். அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் கணிப்பதற்கு பல சோதனைகள் நடாத்தினார்.

அவர் வைத்த தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து "இனி உன் வீட்டிற்கு போகலாம்" என்று சொல்லி அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்.

குருகுலவாசம் செய்த எல்லா மாணவர்களும் சென்று விட்டார்கள். கடைசியில் ஒரே ஒரு மாணவன் மட்டும் மீதி இருந்தான். அவனை மட்டும் முனிவர் வீட்டுக்கு அனுப்ப வில்லை.

யார் அவன் தெரியுமா? ராஜகுமாரன் தான்! அந்த ராஜகுமாரனின் தந்தைக்கு , அந்த ராஜாவுக்கு வயது ஏறிக் கொண்டே போயிற்று.அவர் என்ன இது ... கல்வி கற்கச் சென்ற இளவரசன் இன்னும் திரும்பிவரவில்லையே என்று நினைத்தார். இளவரசன் வந்தால் விரைவில் அவனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு தான் விலகிக் கொள்ளலாம் என்று அவர் நினைத்தார். இளவரசனுக்கு கல்யாணம்வேறு செய்து வைக்கவேண்டும். ஆனால் இளவரசன் வருகிற வழியைக்காணோம்.

ராஜா பார்த்தார். 'சரி, நேரில் விபரம் தெரிந்து கொண்டு வரலாம்' என்று எண்ணி காட்டுக்குப் புறப்பட்டார். அங்கே சென்று முனிவரைப்பார்த்தார். முனிவர் இவரை அன்புடன் வரவேற்றார்.

ராஜா மெதுவாக ... எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டீர்களாமே ... என் பிள்ளையை மட்டும் ...! என்று சொல்லி இழுத்தார். அதற்கு முனிவர் உடனே பதில் சொல்லவில்லை.

ராஜாவை அழைத்துச் சென்று விருந்தினர் குடிசையில் தங்கவைத்தார். பின்னர் சொன்னார்.

"உங்கள் மகன். எல்லாப்பாடங்களிலும் முதல் இடம் பெற்று விட்டான். அப்படி முதலாவதாக வரும் மாணவனுக்கு நான் இன்னொரு தேர்வு வைப்பது வழக்கம். அதிலும் அவன் முதலாவதாக வந்து விட்டால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்ற கௌரவத்தை அடைவான்" என்றார் முனிவர்.

அவ்விதம் சொல்லிவிட்டு அவர் அங்கிருந்து சென்றார். ராஜா அங்கேயே தங்கி இரவு படுத்துத்தூங்கினார். காலையில் எழுந்திருந்து அந்த குடிசைக்கு வெளியே வந்தார்.- பல்துலக்குவதற்காக. அந்தச் சமயத்தில் தூரத்தில் ஒருவன் ஒரு கையில் கோடரியை வைத்துக்கொண்டு தலையில் ஒரு பெரிய விறகுக் கட்டைச்சுமந்து கொண்டு வருவது தெரிந்தது. யாராவது விறகு வெட்டியாக இருக்கும் என்று அரசர் நினைத்தார் அருகில் வந்ததும் உற்றுப்பார்த்தார். பார்த்தால் ... அது தன்னுடைய மகன் ! திகைத்துப்போய்விட்டார்! .

என்ன இது? ஒரு ராஜகுமாரனைக்கூட இது போன்ற வேலைகளையெல்லாம் செய்யச் சொல்கிறார்களே! என்று நினைத்தார். ராஜகுமாரன் விறகு கட்டைக் கொண்டுபோய் கொல்லைப்பக்கம் வைத்தான்.அதே சமயம் முனிவர் அங்கு வந்தார். "என்ன மகனே! விறகு வெட்டிக்கொண்டு வந்துவிட்டாயா? சரி ... இப்போது ஒரு துடைப்பத்தை எடுத்துக்கொள். விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தையும் கூட்டிப்பெருக்கி சுத்தம் செய்... போ! "

"அப்படியே செய்கிறேன் குருவே" என்று கூறிவிட்டு இளவரசன் சென்றான் . விருந்தினர் குடிசையின் வாசல்பக்கத்தை கூட்டிப்பெருக்கி நன்றாக சுத்தம் செய்தான்.

இதை ராஜா பார்த்து, "மகனே! என்ன வேலை செய்கிறாய்? துடைப்பத்தை கீழே போடு" என்றார்.இப்போது அந்த ராஜகுமாரன் சொல்கிறான் . "தந்தையே! இது என்னுடைய குருதேவரின் உத்தரவு! இங்கே நான் ஒரு மாணவன். இங்கே அரசனும் ஒன்றுதான்! ஆண்டியும் ஒன்றுதான்! குருதேவர் சொல்வதை மறுக்காமல் செய்வதுதான் எங்கள் கடமை" என்றார்.

இந்த சமயம் முனிவர் அங்கே வந்து, இளவரசனை முதுகில் தட்டிக்கொடுத்தார். பின்னர் அரசரிடம் சொன்னார்.

அரசே உங்கள் பிள்ளை என்னுடைய கடைசித் தேர்விலும் வெற்றி பெற்றுவிட்டான். பணிவுதான் மாணவர்களின் மிகவும் உயர்ந்த குணம். குருநாதர் சொல்வது மனதுக்குப்பிடிக்காவிட்டாலும் கூட மறுக்காமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எதைச் செய்யலாம் எதைச் செய்யக்கூடாது என்ற விவேகம் அவர்களுக்கு வந்து விடும்! செய்யக்கூடாததைக்கூட பெரியவர்கள் சொன்னால் செய்துதான் ஆக வேண்டும் என்ற பணிவு அவர்களுக்கு வந்துவிடும்.! இந்தக்குணம் வந்து விட்டால் ... அவர்கள் எத்தனை கடினமான வேலையாக இருந்தாலும் கூட சுலபமாக செய்து முடிப்பார்கள். துன்பத்திலேயும் துவண்டு போக மாட்டார்கள். இந்தப்பணிவும் விவேகமும் அவர்களிடம் மன உறுதியை ஏற்படுத்தும். அந்த உறுதி உங்கள் மகனுக்கும் இப்போது வந்து விட்டது. இனிமேல் அவனை நீங்கள் அழைத்துக் கொண்டு போகலாம். அவன் நிச்சயமாக பேரும் புகழும் பெறுவான் என்றார் குருதேவர்.

ராஜா முனிவரிடம் குருதேவா ... புரிந்துகொண்டேன் என்னை மன்னிக்கவேண்டும் என்றார். பின்னர் அரசர் இளவரசரை அழைத்துக் கொண்டு நாட்டிற்கு திரும்பினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லைத்தீவில் 52 ஆயிரம் பேர் இன்னும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை

(கொழும்பு)

போர் முடிவடைந்து சுமார் 2 வருடங்கள் கடந்துவிட்ட போதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 ஆயிரம் பேர் இன்னும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப் படாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களில் இதுவரை 71 ஆயிரம் பேர் மட்டும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இன்னும் 52 ஆயிரம் பேர் மீளக்குடிய மர்த்தப்படாமல் உள்ளனர். இவர்களில் 17 ஆயிரம் பேர் வவுனியா மெனிக்பாம் முகாமிலும் ஏனையவர்கள் தமது உறவினர்கள் வீடுகளிலும் தங் காலிகக் கொட்டில்களிலும் பல் வேறு இன்னல்களுடன் வசித்து வருகின்றனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி குமுழமுனை மத்தி பகுதியில் 262 குடும் பங்கள் மீள்குடியமர்த்தப் படவுள்ளனர்.

இது தவிர முல்லைத் தீவு மாவட்டத்தில் இன்னும் 24 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப் படவேண்டும்.

இப்பகுதிகளில் கண்ணிவெடியகற்றும் பணிகள் நடைபெற்று வருவதால் மீளக்குடி யேற்றம் தாமதமாகி வருகிறது.

இதில் பெரு பாலும் 50 வீதமான மக்கள் எதிர் வரும் மே மாத இறுதியில் மீள்குடியமர்த்தப் படு வார்கள் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. பத்திநாதன் தெரிவித் துள்ளார் (ஸ்ரீ-2)

# இராசி பலன்

16.04.2011
(சித்திரை 03, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.51 மணிவரை
உத்தரம் பிற்பகல் 5.08 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை

**மேடம்** கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், பிறர் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை எளிதாக செய்து முடிப்பீர்கள், உஷ்ணரோகமுண்டு.

**இடபம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படும்.

**மிதுனம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,பாரட்டும் புகழும் கூடும், தாய்வழி உறவினர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கலாம்.

**கடகம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்கள் நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

**சிங்கம்** பொருள் வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள்,தொழில் வளர்ச்சி மேலோங்கும்,தொகை எதிர் பார்த்தபடியே கிடைக்கும்,வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வரவுக்கேற்ற செலவு உருவாகும், குடும்பத்தினர் மனம் கோணாமல் நடந்து கொள்வது நல்லது.

**துலாம்** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள்,வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றியமைப்பீர்கள்,மன அமைதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடுவந்து சேரும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தினர் உங்களைப் புரிந்து நடப்பார்கள், பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள்,தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்,நண்பர்கள் முலம் உதவிகள் கிடைக்கலாம்.

**மகரம்** கூட்டுமுயற்சி வெற்றி தரும், பகையொன்று நட்பாகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** வாழ்க்கை துணைவழியே மனக்கசப்பு ஏற்பட்டு மறையும்,பிள்ளைகளில் விழிப்புணர்வு தேவை, எடுத்த காரியம் தாமதமாகலாம்.

**மீனம்** களஸ்திர நன்மையுண்டு,எடுத்த காரியங்கள் நிறைவேறும், போசன சுகமுண்டு,சுற்றத்தார் வருகையால் சுகம் காண்பீர்கள்.

வளவன்

# வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் மூலம் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு பாதிப்பில்லை

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் , 20 சதவீதமான புலமைப் பரிசில்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில்கள் மூலம் இலவசமாக இலங்கை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, வெளி நாட்டு பல்கலைக்கழ கங்களின் மூலம் இலங்கையின் அரசாங்கப் பல்கலைக்கழகங் களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவிடப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 140 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 100 |
| தக்காளி | 80 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 90 |
| கரட் | 120 | 200 | 180 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40-50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 75 |
| பாகற்காய் | 80-90 | 130 | 80 |
| வெண்டிக்காய் | 40-50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 70 | - |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 |
| போஞ்சி | - | 140 | - |
| கத்தரிதம்புள்ள | - | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# புதுவருட கொண்டாட்டத்தை கெடுத்துவிட்டார் பான் கீ மூன்

## ஜனாதிபதி மகிந்த கவலை



(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனது புதுவருடக் கொண்டாட்டத்தை கெடுத்து விட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லங்காதீப பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு புது வருட வாழ்த்தை தெரிவிப்பதற்காக ஜனாதிபதியை தொடர்பு கொண்ட குறித்த ஊடகவியலாளர் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் விசாரித்துள்ளார். இதனையடுத்து கடும் ஆத்திரத்துடன் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதியை தொடர்புகொண்ட ஊடகவியலாளர் ஜனாதிபதியுடனும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுடனும் நெருக்கமான தொடர்புகளை கொண்டுள்ளவர். நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தனக்கும் அரசாங்கத்திற்கும் கடுமையான பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி இந்த சூழ்ச்சிக்கும் எதிர்க்கட்சியை சேர்ந்த சிலரும் பங்களிப்புச் செய்துள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார.

எவ்வாறாயினும் பான் கீ மூனின் அறிக்கைக்கு எதிராகவும் டைம்ஸ் பத்திரிகை உலகில் பலவாய்ந்த தலைவர்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாகவும் விளம்பரங்களை செய்யுமாறும் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்கும் வரை அது குறித்து ஊடகங்களுக்கு கருத்து எதனையும் வெளியிட வேண்டாம் என அந்த கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கட்சியின் உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை இதுவரை பகிரங்கப்படுத்தப் படாததாலும் அது குறித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமான அறிக்கை எதனையும் வெளியிடாத நிலையிலும் குழப்பமடைந்து அறிக்கைகளை வெளியிடும் தேவையில்லை என கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடு சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவின் பேரில் அவர் இதனை தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கு கட்சியின் மற்றுமொரு பிரதித் தலைவரான சஜித் பிரேமதாசவும் இணக்கம் வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவர், கட்சியின் சிரேஷ்ட தலைவர்களைஎதிர்வரும் 19ஆம் திகதி அழைத்து கலந்துரையாடவுள்ளார். (ச-5)

## ஜனாதிபதி திங்களன்று பங்களாதேஷ் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவின் அழைப்பையேற்று பங்களாதேஷிற்கு ஐந்து நாள் இராஜாங்க விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை டாக்காவுக்கு பயணமாகவுள்ளார்.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதலாவது இராஜாங்க விஜயமாகும்.

இந்த விஜயத்தினால் இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் இடையிலான நல்லுறவு மேலும் வலுப்பெறுமென வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

வெவ்வேறு நாட்டு மக்கள் தமக்குள் உறவாடுவதால் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் இந்த பிராந்தியத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் இரு நாடுகளும் செயற்படுகின்றன.

சர்வதேச அரங்கங்களில், விவகாரங்களில் இரு நாடுகளும் பொதுக்கருத்தை முன்வைப்பதில் வெற்றி கண்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் சாதாரணமானது. பங்களாதேஷிற்கான இலங்கையின் ஏற்றுமதி கடந்த 2010ஆம் ஆண்டு 35.54 மில்லியன் அமெரிக்க டொலராகும். இறக்குமதி 12.60 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

சாயமூட்டப்பட்ட பருத்தித் துணி, பிளாஸ்ரிக் பொருட்கள், எலாஸ்ரிக் நொதியங்கள், வீதியமைக்கப் பயன்படும் பிட்டுமன், கடதாசி, கடதாசி மட்டை ஆகிய பொருட்களை இலங்கை பங்களாதேஷிற்கு ஏற்றுமதி செய்தது.

அண்மையில் மிஹின் ஏயார் இரண்டுநாடுகளுக்குமிடையிலான விமான சேவையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்து இராணுவச் சிப்பாய்கள் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் பலாலி இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த இரண்டு இராணுவ சிப்பாய்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்றுள்ளது.

இதில் எச்.எம்.திலகரட்ண (வயது 40) மற்றும் எல்.குணரட்ண ஆகிய இருவருமே படுகாய மடைந்தவர்களாவர்.

இரண்டு இராணுவச் சிப்பாய்களும் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இருவரின் வலது காலில் முறிவு ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-6)

## மூன்று நாள் அகண்ட பஜனை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் அகில உலக கவுன்சில் தலைவரும், தற்போதைய உலகக் கவுன்சில் ஆலோசகரும் சத்ய சாயிபாபாவின் நெருங்கிய பக்தருமான இந்துலால்ஷா 16, 17, 18 ஆம் திகதிகளில் உலக நலன் கருதி அகண்ட பஜனை செய்யும்படி விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன்படி இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிமுதல் காலை 4.00 மணி வரையும், நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் காலை 5 மணி வரையும், நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 7 மணி முதல் காலை 5 மணி வரையும் யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் பஜனை நடைபெறும்.

இதேபோல் மானிப்பாய், பருத்தித்துறை, கோப்பாய், யாழ்.மத்தி உள்ளிட்ட ஏனைய சாயி நிலையங்களிலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (ச)

## சுகுணம் ஜோசப்பின் தஞ்சம் நிராகரிப்பு

(ரொரன்டோ)

படுகொலை செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் துணைவியார் சுகுணம் ஜோசப்பின் அரசியல் தஞ்சக் கோரிக்கை மனுவை கனடா நிராகரித்துள்ளது.

அவரும் அவரது கணவரும் சார்ந்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாக செயற்பட்ட ஒரு அமைப்பு என்று காரணம் கூறி பயங்கரவாதத்துக்கு ஆதரவான அமைப்பின் உறுப்பினர்கள் என்ற வகையிலேயே திருமதி ஜோசப்பின் மனுவை நிராகரித்ததாக கனடிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் அபிலாஷைகள் தொடர்பான கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் அமைப்புடன் பகிர்ந்து கொண்டிருந்தாலும் அது சமாதானத்துக்கான நோக்கில் செயற்பட்ட ஒரு அமைப்பு மாத்திரமே என்று காரணம் கூறி திருமதி ஜோசப் சார்பில் இந்த முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக அவரது மகனான டேவிட் ஜோசப் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனது தந்தையார் படு கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் முக்கிய சாட்சி தனது தாயாரே என்றும் அத்துடன் அவரும் இரு தடவைகள் அங்கு துப்பாக்கித் தாக் குதலுக்கு உள்ளாகியிருந்தார் என்றும் கூறும் டேவிட் ஜோசப் அவர்கள், ஆகவே இலங்கைக்கு திரும்பிச்செல்லும் பட்சத்தின் இன்னமும் தனது தாயாரின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்றும் கூறியுள்ளார். (ச-5)



புதுவருடக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி குடும்பம்...

## அனுமதி கிடைக்காததால் விடுதலையில் தாமதம்!

(வவுனியா)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்படவிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் 500 போராளிகளும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தடுப்பு முகாம்களில் இருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 500 போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அறிவித்திருந்தது.

இப் போராளிகளை வவுனியாவில் வைத்து விடுதலை செய்வதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அனுமதி கேட்டிருந்தது. ஆனால் அவரின் அனுமதி கிடைக்காததால் புத்தாண்டுக்கு முன்னர் இப் போராளிகள் விடுதலை செய்யப்படவில்லை.

அதேவேளை இப் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களில் நாளை புத்தாண்டு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் படைத்தரப்பின் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதாகவும் இப் போராளிகளை உறவினர்கள் பார்வையிட அனுமதிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## ஆற்றில் மூழ்கி இளைஞர் பலி மேலும் மூவரை காணவில்லை

(கொழும்பு)

அவிசாவளை பகுதியில் கஹனவிட்ட எல்ல ஆற்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு குளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பலியானதுடன் மேலும் மூவர் காணாமல் போயுள்ளனர்.

26 வயதான மொஹமட் சப்ரின் என்பவரே பலியாகியுள்ளார். மயில்வாகனம் ஜசிகரன், மொஹமட் நிவாஸி, சாஜஹான் மொஹமட் ஆகியோரே காணாமல் போயுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

மேற்படி நால்வரும் கொழும்பு 12 புதுக்கடைப் பகுதியை சேர்ந்தவர்கள் ஆவர். உறவினர் வீடொன்றுக்குச் சென்று திரும்பி வரும் வழியிலேயே இவர்கள் ஆற்றில் குளிக்கச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. ஆற்றில் மூழ்கிய இவர்களை அயலவர்கள் காப்பாற்ற முயற்சித்த போதிலும் அது பலனளிக்கவில்லை.

கடற்படையினரின் உதவியுடன் உடல்களை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அவிசாவளைப் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

# அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில்

## தேர்த்திருவிழா சிறப்புமலர்-16.04.2011

### அருள் ஆசியுரை



திருவும், கல்வியும், சீரும், சிறப்பும் பெருகும் அல்வாய் அருள்மிகு ஆலடிப்பிள்ளையார் இன்று இரதோற்சவம் கண்டு மிகவும் சந்தோஷம் அடைகின்றோம். தெய்வ பூசையும், சிறந்த தவமும் தியானமும், பெரியவர்களுடைய வாழ்த்துதலும் நம்மை என்றும் வாழவைக்கும். ஆத்ம ரீதியில் உள்ளார்த்தமான உணர்வுகளை வாசிலியோடு மோகிப்பவனை வானமும் வையமும் வாழ்த்தும். இவ் எண்ண அலையில் மரபு விழுமியங்கள் தவறாது வாழ்ந்து வந்த பெரியோர்கள் என்ற வகையில் அன்பர் கதிர்காமநாதன் அவர்களும் அவர் தந்தையாரும், அவர் வழி தோன்றியவர்களும், ஏகமாய் பூசித்த பாலகணபதி பஞ்சமுக திரிகுணங்களில் தாமதகுணமாகி பஞ்சமுக கணபதியாக இரத ஆரோகணமும் இரத அவரோகணமும் பஞ்சமுக சகஷ்ர அர்ச்சனையும் சிறந்தோங்கி மலர்ந்து அருள் பொங்க மகிழ்வுடன் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க இன்பமே சூழ்ந்து எல்லோரும் வாழ இவ்வேளையில் அருளாசி வழங்குவதில் மிகுந்த பெருமிதம் அடைகின்றோம்.

**சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்**
**(உற்சவ கால மேற்பார்வைக்குரு)**
**நெல்லண்டைப் பத்திரகாளி தேவஸ்தான பிரதமகுரு.**

### ஆசியுரை



திருவருள் மிகு ஆலடியின் பாலகணபதிக்கு இரதோற்சவம் நடைபெற திருவருள் கிட்டியுள்ளது. ஆணவம், கன்மம், மாயை எனும் அகம் பாவத்தை அழிக்கும் உற்சவம் இரதோற்சவம். எம்பெருமான் இரதோற்சவத்தில் ஆரோகணிப்பது கண்டு மனம் மகிழ்கின்றோம். மேலும் சைவசமய மக்களுக்கும் உபயகாரர்களுக்கும் சாந்தி, சமாதானம், இஷ்டசித்தி அருள்பாலித்து நல்வாழ்வு வாழ எம்பெருமான் பாலகன் பாலகணபதியின் அடியேன் அருள்ஆசி கூறி மன நிறைவு கொள்கின்றோம்.

**சாதகஞானபானு துவஜாரோகண பூஷணம்**
**சிவஸ்ரீ பா.பாலமனோன் குருக்கள்**
**(மகோற்சவ பிரதமகுரு)**

### பாலகணபதியின் அருள்பெறுவோம்!




அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் பாலகணபதியாய் வீற்றிருந்து எம்மையெல்லாம் காத்தருளும் எம்பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா .

எங்கள் ஆலயத்தின் வளர்ச்சியையும் அதன் தொடர்ச்சியையும் காணும்போது எங்கள் ஆலடிவிநாயகப்பெருமானின் கருணையை நினைந்து எம்மேனி சிலிர்க்கின்றது. இருபத்து மூன்று ஆண்டுகளாக கட்டுத்தேரில் உலாவந்த எம்பெருமானுக்கு சென்ற ஆண்டு சித்திரத்தேர் ஒன்றை அமைத்து, எம் எல்லோரின் கனவையும் எம்பெருமான் அருளால் நனவாக்கிக்கொண்டோம்.

அன்று கட்டுத்தேரில் பஞ்சமுக கணபதியை எழுந்தருளச் செய்து, தேர்த்திருவிழாவைச் செய்து கொண்டிருந்தவேளை, பஞ்சமுக கணபதியை கட்டுத் தேரில் ஆரோகணிக்கச் செய்வதில் நாம் அனுபவிக்க வேண்டிய ஆசாரங்களை எல்லாம் பெரியார்கள் எடுத்துரைத்தனர். கட்டுத்தேரைச் சித்திரத்தேராகக் காண, நாம் அனைவரும் எம் பாலகணபதியை வேண்டினோம். அவனருளால் பலதரப்பினரதும் முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் சித்திரத்தேர் கைகூடியது. இன்று இடம்பெறுகின்ற சித்திரத்தேர்ப்பவனி ஆலடியானின் கருணையை எமக்கு வழங்குவதோடல்லாமல் சிறந்த வாழ்க்கைத் தத்துவத்தையும் எடுத்துரைக்கின்றது. ஊரெல்லாம் கூடி இழுத்துத் தேரின் நகர்வுக்கு அவசியம் ஒற்றுமை நிலவ, ஒன்றாகக் கூடி இறைபணி செய்யும்போது எமது வாழ்வு மலரும் சிறக்கும்.

இத்தத்துவத்தின் வழியே எல்லோரும் இறைபணி செய்து, சீரிய வாழ்வுபெற எம் பாலகணபதியின் அருள் எல்லோர்க்கும் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.


**அன்பன் கி.கதிர்காமநாதன்**
**தலைவர், தேர்த்திருவிழா.**



*நோக்கமொரு தீகைஷயென நூலுரைக்கும் பாங்கினிலே*
*ஆக்கமெலாம் நாமடைய ஆலடியில்- மீக்குயரும்*
*கோயிலுறைந் தூர் முழுதும் கூர் விழியால் பார்ப்பவனை*
*வாயினால் நாள்தோறும் வாழ்த்து!*

*அல்வாயூர் ஆலடியில் ஆன்றமர்ந்தே அன்பர்க்கு*
*பல்காலும் அனுக்கிரகம் பாலிக்கும்-நல்யானை*
*முகத்தானைக் கைகூப்ப முன்வினைகள் யாவும்*
*சகத்தேதான் சாயுமெனச் சார்*

### ஆசிச்செய்தி



தேவஸ்தான தேர்த் திருவிழா சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு நிறைவடைகின்றோம். பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் பேணி வளர்த்து கந்த புராண பூமியாக திகழும் யாழ்ப்பாண மண்ணில் வடமராட்சியில் சாமணந்தறைப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானுக்கு சித்திரத்தேர் பவனி காண்பது எம்மூர் மக்களின் ஒற்றுமையின் சிகரமாக இருக்கிறது.

எம்பெருமானுக்கு சித்திரா பூரணையோடு இணைந்த மகோற்சவத்தில் தேர்ப்பவனியை காண்பது எமக்கெல்லாம் மன நிறைவைத் தருகின்றது. இனிவரும் காலத்திலும் பெருமான் ஆலயத்தில் பல திருப்பணிகள் நிறைவுகண்டு பொலிவோடு விளங்க விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

**க.பாக்கியராசா**
**பரிபாலன சபைத் தலைவர்**

### ஆசியுரை



அல்வாய் சாமணந்தறை அருள்மிகு ஆலடிபாலகணபதி அருள் பொங்க தேர்த் திருவிழாவில் இன்று ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். காலம் காலம் தேர்த் திருவிழா உபயகாரருக்கும் அடியார்கள், அன்பர் அனைவர்களுக்கும் இப்பஞ்சமுக விநாயகரின் திருவருள் கிட்டுவதாக. யாழ்ப்பாணத்தில் நடமாடும் தெய்வம் தவயோக சுவாமிகள் உபாசித்த பாலகணபதி அருள் நோக்கோடும் திருநோக்கோடும் திருவருள் பொழிய ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ இரத்தினேஸ்வரகுரு (குகன் ஐயா)**
**(மேற்படி ஆலயபிரதமகுரு)**

### எல்லாப்புகழும் பாலகணபதிக்கே!



அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவத்தில் இன்று தேர்த்திருவிழா. இன்று எமது ஆலடிவாழ் ஐங்கரன் சித்திரசிற்ப மணித்தேரில் ஆரோகணித்து பஞ்சமுக கணபதியாய் அழகுறப்பவனி வந்து அடியார்களுக்கு அருள்மாரி பொழியும் நாள்.

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலானது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என எல்லா அம்சங்களிலும் சிறப்புற்று மிளிர்கிறது. இங்கு மூலவராக இருப்பவர் பாலகணபதி. இவர் புரிந்துவரும் அற்புதங்கள் சொல்லற்கரியவை. பாலகணபதி விக்கிரகத்தை வன்னிப் பிரதேசத்திலிருந்து எடுத்துவருகின்ற போதே அவர் நிகழ்த்திய அற்புதத்தை எம்முன்னோர் எமக்குக் கதையாகச் சொல்வர். அன்று தொட்டு இன்றுவரை பாலகணபதியின் அற்புதங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

அலைவாய்க் கரையில் அமைந்த ஆலவாய் எனச் சிறப்பிக்கப் பெறும் அல்வாய்ப் பதியின் கண்ணே இந்த ஆலயம் அமைந்திருப்பது இதன் தலச்சிறப்பென்பர். யாழ்ப்பாணத்துத் தவமுனி யோகர் சுவாமிகள் அவர்கள் இந்த ஆலய வளாகத்தில் நிஷ்டையில் அமர்ந்து பாலகணபதியை உபாசித்தார் என்பது வரலாறு.

இந்த ஆலயத்தின் அமைவிடம் குறித்து அறிஞர்கள் பெரிதும் சிலாகிப்பர். ஆலயம் ஊர் எல்லையில் அமைந்துவிட ஊர்முழுவதையும் கூர்ந்து நோக்கி, தனது திருப்பார்வையினாலேயே எல்லோர்க்கும் நயனதீட்சை வழங்கிக்கொண்டிருக்கிறார் பாலகணபதி என இந்த ஆலயச் சிறப்பைக் கூறும் பாடல்களும் பாடப்பெற்றுள்ளன. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் பாலகணபதியாய் வீற்றிருந்து அருளாட்சி செய்துவரும் எம்பெருமான் நடன விநாயகராய் சகல கலைகளையும் போஷித்து வருகிறார். ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளாய், இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் சிவராத்திரி தினத்தன்று பாரம்பரிய மரபுவழி நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, புராண, இதிகாசக் கதைகளை இசை நாடகங்களாகத் தயாரித்து, நடித்து, அந்நாடகங்களையே நிவேதனப் பொருளாய் பாலகணபதிக்குப் படையல் செய்யும் வழமையும் இங்கு தொடர்கிறது. தலைமுறை தலைமுறையாக இந்த நடைமுறை கையளிக்கப்பட்டு வருவதையும் வடமராட்சியில் இசைநாடகத்தின் ஊற்றுக் கண்ணாக இந்த ஆலயம் திகழ்வதையும் இன்று பலரும் அறிவர்.

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயம் படிப்படியாக வளர்ச்சி கண்டுவருகின்றது. ஆரம்பத்தில் மடாலயமாக இருந்த இந்த ஆலயம் இன்று ஆகம விதிப்படி அமைக்கப்பெற்ற கட்டடங்களோடு, பரிவார மூர்த்தங்களும் அமையப்பெற்று, மகோற்சவம் காணும் ஆலயமாகப் பரிணமித்துள்ளது. இதன் ஓர் அங்கமாகவே, இருபத்துமூன்று ஆண்டுகளாகக் கட்டுத் தேரில் எம்பெருமான் பவனி வந்தநிலை மாறி, சென்ற ஆண்டு தொடக்கம் சித்திரசிற்ப மணித்தேரில் ஆரோகணித்து தேர்த்திருவிழா நாளில் பஞ்சகணபதி பவனி வருகின்றார். இந்த ஊர்மக்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து மேலோங்கவும் சிறந்த மானிடப் பண்பைப் பேணவும் சீர்மியவாழ்வு வாழவும் பாலகணபதியின் அருள் சுரந்துகொண்டே இருக்கின்றது. தன்னை வணங்கும் அடியவர்களின் ஆணவத்தை அகற்றி, அருள் சுரந்து, திருநோக்கம் செய்யும் எம்பெருமானின் கருணை மழையில் நனை ந்து நாம் எல்லோரும் ஆனந்தம் காணும் நாள் இத்தேர்த் திருவிழா நாள். இந்நன்நாளில் எல்லாப்புகழும் எம் பாலகணபதிக்கே என்று பாலகணபதியை வாழ்த்துவோமாக!

**கலாநிதி த.கலாமணி**
**சிரேஷ்ட விரிவுரையாளர் , யாழ். பல்கலைக்கழகம்.**


**வண்ணன் டிஜிற்றல்**
**போட்டோ அன் வீடியோ**
**DVD & VCD VHS TO DVD**
றைக்கோடிங்
**வீடியோ எடிட்டிங் போட்டோ டிசைனிங்**
சகலவைபவங்களுக்கும் போட்டோ அன் வீடியோ எடுத்திட நாடுங்கள்
மனோகராவீதி, அல்வாய்.
தொ.பே: 0776054603

Prop. K.Parackraman
0777-656230
**PARAA CO MOTORS**
Main Jaffna Road, Contact No: 0217911742
Nelliady.
**FOR ALL KIND OF MOTOR CYCLE'S SPARE PARTS & OILS**
சகலவிதமான மோட்டார் சைக்கிள்
பிளாஸ்ரிக் ஒட்டு வேலைகளுக்கு

**Varsan Electronics**
Dealars: T.V,Radio, Fan, Watch, Clock & Electronic items.
**வர்ஷன் எலக்ரோனிக்ஸ்**
Proprietor: Mr.Y.Rajarajan
Mobile: 0777 112122
Kodikamam Road, Nelliady
கொடிகாமம் வீதி, நெல்லியடி.

**குரு சவுண்ஸ்**
**(KPN Souns)**
சகல வைபவங்களுக்கும் ஸ்ரிறியோ முறையில் ஒலி அமைத்திட நாடுங்கள்
மணிமஹால், அல்வாய்.
உரிமையாளர்: குருபரன்

**திரு வீடியோ விஷன்**
**(Digital Filming & Digital Photography)**
செல்லையா வீதி, அல்வாய்.
T.P.No: 021 226 2307
Mobile: 077 6629589

**K.T.R POOMPUHAR TRADERS**
**கே.ரி.ஆர் பூம்புகார் ரேடேர்ஸ்**
பிரதான வீதி, வியாபாரிமூலை.
சகலவிதமான இரும்புகேற், றோலிங் கேற், சுருக்கு கேற், கிறில், சில்வர் பைப் வேலைகள் அனைத்தும் மிகச் சிறந்த தொழில்நுட்பத்துடன் செய்து கொள்ளலாம்.
உரிமையாளர்: க.தவயோகநாதன் (யோகன்)

**ஆகாஸ்**
**மணப்பந்தல் சேவை**
பழைய வேதக்கோவிலடி, அல்வாய் வடக்கு.
அம்பிகை, அல்வாய்.
சகல வைபவங்களுக்கும் தேவையான பந்தல் சேவையுடன் கதிரைகள், மாலைகள்
உரிமையாளர்: அ.அகிலன்.

**நிலா**
**மணப்பந்தல் சேவை**
தவமஹால், அல்வாய். புனிதமஹால், வதிரி.
சகல வைபவங்களுக்கும் தேவையான பந்தல் சேவையுடன், கதிரைகள், மாலைகள், சாப்பாட்டு உபகரணங்கள், மின்சாரத்துருவுபலகை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர்: த.ரமணன்
தொ.பே: 021 2263527, 077 247 9641





வடமராட்சி தெற்கு, மேற்கு ஆயுர்வேத பாது காப்புச்சபையினால், இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் அண்மையில் உடுப்பிட்டி பிரதேச உப அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் படையதிகாரி ஒருவர் மங்கல விளக்கேற்றுவதனையும் வைத்தியர் நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதனையும் படங்களில் காணலாம்.

# புத்தாண்டு தினத்தன்று எரிபொருள் தட்டுப்பாடு

## பாவனையாளர் திண்டாட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் புத்தாண்டு தினத்தன்று வாகன எரிபொருள் தட்டுப்பாட்டினால் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

சாவகச்சேரியில் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையமே இயங்கி வருகின்றது. அந் நிலையத்தில் பெற்றோல் முடிவடைந்ததையடுத்தே இந்நிலை ஏற்பட்டது.

பொது இடங்களில் எரிபொருள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் எரிபொருள் இருப்பை தகுந்தவாறு பேண வேண்டியது அவசியமானதாகும்.

எனவே, இனிவரும் காலங்களில் இந் நிலை ஏற்படாதிருக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-29)

# வான் பகுதியை ஆழமாக்கித் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

வடமராட்சி கடற்பகுதியில் படகுகள் கட்டும் வான்பகுதியை ஆழமாக்கித் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டைமானாறு பகுதியில் இருந்து பொலிகண்டி கடற்பகுதிவரை அண்மையில் ஆழமாக்கல் வேலைகள் நடைபெற்றது.

பின்னர் அப்பணி இடையில் தடைப்பட்டதையடுத்து எஞ்சிய கடற்பகுதியான பொலிகண்டியிலிருந்து தும்பளை கிழக்கு வரை ஆழமாக்கித் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது கடல்நீர் வற்றியுள்ளதாகவும் இச்சூழலில் வான் பகுதியை ஆழமாக்குவது இலகுவானதென்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-3-10)

# வீதி புனரமைக்க கோரிக்கை

(மாதகல்)

மாதகல்- பண்டத்தரிப்பு பிரதான வீதியானது, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியால் பயணம் செய்யும் பயணிகள் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய அவலநிலை உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-47)

☆ ☆ ☆

(மாதகல்)

மாதகலிலிருந்து பெரியவிளானுக்குச் செல்லும் வீதியானது, புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகவுள்ளது.

இப்பகுதியால் பயணிப்போர் பயணத்தை மேற்கொள்ள முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-47)

## "கணேசம்" நூல் வெளியீடும் கனணி ஆய்வுகூட திறப்புவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேசா வித்தியாசலையின் 80ஆவது ஆண்டு நிறைவில் "கணேசம்" நூல் வெளியீடும் கனணி ஆய்வுகூடத் திறப்புவிழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு முதல்வர் சி.திரிசுரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், பாராளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம், ஓய்வுபெற்ற சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார், ஊரெழு படைமுகாமின் கட்டளையிடும் அதிகாரி விஜயரத்ன ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன், நூல் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் சி.வேல்நம்பி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-3-78)

## குருத்தோலை ஞாயிறு வழிபாடுகள்

கத்தோலிக்க மக்களின் புனித வாரத்தின் தொடக்க நாளான குருத்தோலை ஞாயிறு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

நாளை அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகளை நடத்துமாறும் எதிர்வரும் பெரிய வியாழன், பெரிய வெள்ளி போன்ற தினங்கள் முக்கிய நாட்களாக கத்தோலிக்க மக்களால் நினைவு கூரப்படுவதால் பெரிய வெள்ளியன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ்.மரியன்னை தேவாலயத்தில் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# உடுப்பிட்டி வடக்கிற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(உடுப்பிட்டி)


உடுப்பிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு கடந்த 13ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அங்குள்ள மக்களைச் சந்தித்தார்.

முதலாவதாக பங்குரான் கிராமத்திற்குச் சென்ற அவர், அங்குள்ள மக்களோடு உரையாடி அக்கிராமத்திலுள்ள நீதிதேவி சனசமூக நிலையத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலையைக் கையளித்தார்.

தொடர்ந்து கம்பர்மலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு அங்குள்ள வீதிகளையும் பார்வையிட்டார்.

பின் பாரதி சனசமூக நிலையம் முன்பாக உரையாற்றினார். இக்கிராம மக்களின் தேவையை அறிந்து படிப்படியாக நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். கலைவாணி சனசமூக நிலையத்திற்கு 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலையைக் கையளித்தார்.

அத்துடன் வல்லிச்சியம்மன் கம்பர்மலை பாடசாலை வீதியைப் புனரமைப்பதற்காக ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார். (ஸ்ரீ-3-52)




# கற்கள் பறிக்கப்பட்டிருந்தும் அணைக்கட்டு புனரமைக்கப்படவில்லை

## மக்கள் விசனம்

பாசையூர் கடல் அணை புனரமைப்புப் பணிகளுக்கென நீண்டகாலமாகக் கற்கள் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அணைக்கட்டு அமைக்கும் பணிகள் இதுவரை நடைபெறவில்லையெனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக அணைக்கட்டு கட்டுவதற்கு குவிக்கப்பட்டிருந்த ஒரு தொகைக் கற்கள் காணாமற் போயுள்ளதாகவும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

## பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பௌர்ணமி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-3-29)

# மருதங்கேணி பொதுச்சந்தை மீண்டும் ஆரம்பம்

பல வருடங்களாக இயங்காத நிலையிலிருந்த மருதங்கேணிப் பொதுச்சந்தை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இச்சந்தையானது, கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் பளை மற்றும் மருதங்கேணிப் பிரதேசத் திருகுளிய சிவில் நிர்வாக இராணுவ அதிகாரி கேணல் சில்வாவினால் திறக்கப்பட்டது.

இச்சந்தை கடந்த 5 வருடங்களுக்கு மேலாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக இயங்காமல் இருந்தமையால் இப்பகுதி மக்கள் கிளிநொச்சி, பளை மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலையிருந்தது.

தற்போது இச்சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் தமது தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக உள்ளதென மக்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-64)

## பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி.செ.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-51)



போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் மன நிலையை மேம்படுத்தும் நோக்கில் ஏஏஏ மூவிஸ் இன்ரநஷனல் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான கல்விச்சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. இதில் நிறுவனத்தலைவர் க.செவ்வேள் மாணவர்களை அழைத்துச் செல்வதையும் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# அசம்பாவிதங்களை தடுப்பதற்காகவே புத்தாண்டு விடுமுறையில் நிபுணர்குழு அறிக்கை வெளியீடு

## இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு

**இலங்கையில் நீண்ட விடுமுறை நடைமுறையில் உள்ள காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு நிபுணர் குழு அறிக்கையை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நிபுணர் குழு அமைக்கப்பட்டது. குறித்த சந்தர்ப்பத்தில் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தியதுடன் ஐக்கிய நாடுகளின் இலங்கைக் கிளை ஆர்ப்பாட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டது.

இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படுவதனை தடுக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை இலங்கையில் பிரதான பண்டிகை கொண்டாடப்படும் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நீண்ட விடுமுறை காலம் என்பதனால் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் விரிவான பதிலளிக்கத் தவறியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

நிபுணர்குழு அறிக்கை பக்கச்சார்பானதும் அடிப்படையற்றதுமான முறையில் காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. எனினும் குறித்த அறிக்கை தொடர்பான முழுமையான எதிர்ப்பு இதுவரையில் வெளியிடப்படவில்லை.

அநேகமான அதிகாரிகள் விடுமுறையில் இருப்பதனால் இவ்வாறு சுருக்கமான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை நாளை மறுதினம் திங்கட்கிழமை அளவில் முழு அளவிலான எதிர்ப்பு வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலாகங்களில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெற விருந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கிழக்கு மாகாண கடலோரங்களில் கதிரியக்க ஆய்வு நடவடிக்கை

கிழக்குமாகாண கடலோரங்களில் கதிரியக்க ஆய்வுக்கான கடல் நீர் மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக இலங்கை அணுசக்தி முகவராண்மை அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாணம் தொட்டு தென்மாகாணம் வரையான கடலோர பிரதேசங்களின் பல்வேறு இடங்களில் கதிரியக்க பாதிப்பு குறித்த ஆய்வுக்கான கடல் நீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.

இலங்கை சமுத்திரவியல் மாசு கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இலங்கை அணுசக்தி முகவராண்மை அமைப்புடன் இணைந்து ஆய்வுக்கான கடல் நீர் மாதிரிகளை சேகரிக்கவுள்ளனர்.

ஜப்பானில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியின் பின்னான அணு உலை விபத்து மற்றும் அணுக்கதிர் கழிவுகள் கொண்ட நீர் கடலில் கொட்டப்பட்டமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

## இலங்கைக்கு கேபிள் மூலம் மின்சாரம்; இரண்டாம் கட்ட ஆய்வு முடிவு

(இராமேஸ்வரம்)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கேபிள் மூலம் மின்சாரம் கொண்டு செல்வதற்காக இராமேஸ்வரம் கடல் பகுதியில் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட ஆய்வு முடிவுற்றது.

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கேபிள் மூலம் மின்சாரம் கொண்டு செல்வதற்காக பாக்குநீரிணை கடல் பகுதியில் தொடர்ந்து ஆய்வு நடந்து வருகிறது.

இந்திய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி கழகத்தால் கடந்த சில மாதங்களாக இராமேஸ்வரம் கடல் பகுதியில் நடத்தப்பட்டுவரும் இந்த ஆய்வின் இரண்டாம் கட்ட பணி இந்திய கடல் எல்லைப்பகுதியில் நடந்து வந்தது.

மத்திய அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கழக விஞ்ஞானி ரவீந்திரன் தலைமையில் 10 விஞ்ஞானிகள் உள்ளிட்ட குழுவினர் கடலுக்குள் ஆய்வு நடத்தினர்.

இதை தொடர்ந்து கடலின் நிலத்தடி மட்டத்தில் சேகரிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மண் மாதிரிகள் கடல் நீர் உள்ளிட்ட பொருட்களுடன் படகில் நேற்று முன்தினம் மாலை ராமேஸ்வரம் திரும்பியவர்கள் இவற்றை வானில் ஏற்றிச்சென்றனர். இதை தொடர்ந்து மூன்றாவது கட்டமாகவும் கடலுக்குள் ஆய்வு நடத்தப்பட்டு அதன் அறிக்கைக்கு பின் கேபிள் மூலம் மின்சாரம் கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். (ஸ்ரீ-2)

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

அமைச்சருடனான கலந்துரையாடல்

மேற்படி எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், சங்கத்தின் எதிர்கால வளர்ச்சி கருதியும் கௌரவ பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சங்க நிர்வாகத்தையும் அங்கத்தவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

எனவே நாளை 17.04.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்.

(சி-2980)

## இயற்கை அனர்த்தம் பற்றிய எதிர்வுகூறல் ...

( விசுவமடு )

இயற்கை அனர்த்தம் பற்றிய எதிர்வுகூறல்களை, புதிய புன்னை நீராவி, விசுவமடு என்ற முகவரியைச் சேர்ந்த வி.கணேசமூர்த்தி என்பவர் எமக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஏற்கனவே அவர் அனுப்பி வைத்த எதிர்வுகூறல்களை அவதானிப்புச் செய்ததன் வகையில் அவரின் எதிர்வுகூறல் சாத்தியமானதென்பதை அறிய முடிந்துள்ளது.

அதன் அடிப்படையில் அவரின் எதிர்வுகூறல்களை வாசகர்களின் அவதானிப்புக்காக இங்கு தருகின்றோம்.

✶ *04.04.2011 முதல் 08.04.2011 வரையான காலப்பகுதிக்குள் புவியில் சக்திவாய்ந்த நில அதிர்வு இடம் பெறலாம்.*
*இதற்கமைவான நாள்-06.04.2011*

✶ *16.04.2011 முதல் 24.04.2011 வரையான காலப்பகுதிக்குள் புவியில் சக்தி வாய்ந்த எரிமலை வெடிப்பு நிகழலாம்.*
*இதற்கமைவான இரு நாட்கள்-17.04.2011, 23.04.2011*

✶ *27.04.2011 முதல் 04.05.2011 வரையான காலப்பகுதிக்குள் வங்கக் கடலில் புயல் சின்னம் தோற்றம் பெற்று கிழக்கு நோக்கி நகரலாம்.*

✶ *02.05.2011 முதல் 14.05.2011 வரையான காலப்பகுதியில் இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் அதீதமான வெப்பம் உயர்வடையும்.*

✶ *04.05.2011 முதல் 09.05.2011 வரையான காலத்துள் மிகவும் பலம் வாய்ந்த நிலநடுக்கம் புவியின் எந்தவொரு பகுதியிலாவது இடம் பெறலாம்.*
*இதற்கமைவான இரு நாட்கள்-07.05.2011 , 08.05.2011*

✶ *14.05.2011 முதல் 20.05.2011 வரையான காலத்துள் இலங்கையின் தென் மேற்குப் பகுதியில் ஏற்படும் திடீர் வளிமண்டல மாற்றத்தினால் கொழும்பு மாவட்டமும் அதனை அண்மித்த மாவட்டங்களும் வெள்ள அனர்த்தத்தைச் சந்திக்கலாம். இதன் தீவிரத்தன்மை 18.05.2011 இல் அதிகரித்துக் காணப்படலாம். ஏற்படும் நாளிலிலிருந்து 05 நாட்கள் நீடிக்கலாம்.*

✶ *15.04.2011 முதல் 21.04.2011 வரை வடக்குக் கிழக்குப் பகுதியில் பிரதேச ரீதியாக மாலை வேளைகளில் ஆங்காங்கே இடிமின்னல், காற்ற முத்தத்துடன் கூடிய மழை பெய்யும்.*

# கோப்பாய் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

கோப்பாய் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிமுடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**21 வயதுப் பெண்கள்**

*100 மீற்றர் ஓட்டம்*

தே.தர்சிகா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி),கெ.ஆன்நிசாறா (யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி), யோ. நர்மிதா(யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

*200 மீற்றர் ஓட்டம்*

தே. தர்சிகா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), ந.நிசாந்தினி (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), ய.ஜஸ்ரீனியா (யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

*400 மீற்றர் ஓட்டம்*

த.வினோசிகா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), பா. சிந்துஜா (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி), ம.பிரியா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி),

*800 மீற்றர் ஓட்டம்*

ந.நிஷாந்தினி (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), செ. ஈவ்லின்கவின்ஜா (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), இ. நிறோஜா (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி),

*1500 மீற்றர் ஓட்டம்*

பா. சிந்துஜா (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி), நா. சிந்துஜா (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), சி.தட்சுணா (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),

*நீளம் பாய்தல்*

ம.புகழரசி (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), பா. இதயரேகா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), சி.விபூசனி (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி),

*உயரம் பாய்தல்*

தே. தர்சிகா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), க. சிவதுர்க்கா (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ப. வேணிஜா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),

*முப்பாய்ச்சல்*

கெ.ஆன்நிசாறா (யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரி), செ. ஈவ்லின்கவின்ஜா (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ரா. சுரேகா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி),

*5000 மீற்றர் ஓட்டம்*

செ. ஈவ்லின்கவின்ஜா (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ப. வேணிஜா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), உ. கீர்த்திகா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),

*குண்டெரிதல்*

[illegible] (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), இ. ஹயாநிதி (யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ஜெ. ஜெனிதா (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி),

*தட்டு எறிதல்*

ச.யசோதா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), இ. ஹயாநிதி (யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரி), இ. ரஜித்தா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),

*ஈட்டி எறிதல்*

ச.யசோதா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), இ. ரஜித்தா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), ஸ்ரீ.சாமிலி (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி),

*அஞ்சல் 4 × 100*

(யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),(யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),(யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி),

*அஞ்சல்4 × 200*

(யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),(யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),(யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி),

**11 வயது ஆண்கள்**

*75 மீற்றர் ஓட்டம்*

வி. தர்சன் (யா/ சிறுப்பிட்டி அ.த.க.பா), ம. நாகமடுசன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), க. தேனுஜன் (யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்)

*100 மீற்றர் ஓட்டம்*

வி. தர்சன் (யா/ சிறுப்பிட்டி அ.த.க.பா), க. தேனுஜன் (யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலய) , அ. நிரோன் (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

*நீளம் பாய்தல்*

வி. தர்சன் (யா/ சிறுப்பிட்டி அ.த.க.பா), ம. சோபனன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), ச.சாரங்கன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்),

*உயரம் புாய்தல்*

ம. சோபனன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), சி. டிலக்ஷன் (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), லோ. அபிசன் (யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்),

**13 வயது ஆண்கள்**

*100 மீற்றர் ஓட்டம்*

சு.கோஜிதன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), பா. பானுசன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), சி. மயூரன் (யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்),

*200 மீற்றர் ஓட்டம்*

சு.கோஜிதன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), த. தனுசன் (யா/ சிறுப்பிட்டி அ.த.க.பா), ந. கவிஸ்னா (யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு),

*நீளம் பாய்தல்*

கோ. விதுஷன் (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய), ச. விஜயேந்திரன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தா கல்லூரி), ம. துஸ்யந்தன் (யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை)

*உயரம் பாய்தல்*

சி. டானியல் நிர்சாந் (ஊரெழு கணேசா வித்தியாலயம்), வ. நிருஜன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), த. நிஷாந்தன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),

*அஞ்சல் 4 × 100*

(யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),(யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு), (யா/ ஆவரங்கால் நடராஜ ராம),

**15 வயது ஆண்கள்**

*100 மீற்றர் ஓட்டம்*

நா. சுமன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அ. நிரோஜன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), இ. செந்தூரன் (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி,

*200 மீற்றர் ஓட்டம்*

நா. சுமன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அ. நிரோஜன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), த. தனுசன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி),

*400 மீற்றர் ஓட்டம்*

நா. சுமன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அ. நிரோஜன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), த.விதுஷன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி),

*நீவ.ம் பாய்தல்*

ச.சுஜீபன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), அ. தனுஷன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), இ. தனீஸ் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),

*உயரம் பாய்தல்*

ச.சுஜீபன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), யோ. தேனுஜன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), கா. தனுசன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி),

*குண்டு எறிதல்*

லோ.சிந்துஜன் (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), ஜெ. சயந்தன் (யா/ கோப்பாய் நாவலர் தமிழ்), இ.விமர்சன் (யா/ நீர்வேலி றோ.க.த.க)

*தட்டு எறிதல்*

பி.வீரவாணன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ச. கணேஸ்வரன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜெ. சயந்தன் (யா/ கோப்பாய் நாவலர் தமிழ்)

*ஈட்டி எறிதல்*

க. ஜிந்துஜன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), ச. கணேஸ்வரன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), ஆ. தார்மீகன் (யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு),

*அஞ்சல் 4 × 100*

(யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), (யா/ ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி), (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)

*அஞ்சல் 4 × 400*

(யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),(யா/ கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), (யா/ கோப்பாய் மகா வித்தி

100 மீற்றர் ஓட்டம்

*17 வயது ஆண்கள்*

அ. கஜிந்தன் (யா/கோப்பாய் மகா வித்தி), கி. செலக்சன் (யா/ கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி), மு. வாகீசன் (யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்),

*200 மீற்றர் ஓட்டம்*

அ. கஜிந்தன் (யா/கோப்பாய் மகா வித்தி), இ. கலிஸ்ரன் (யா/ கோப்பாய் மகா வித்தி), ச. விக்னேஸ் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),

*400 மீற்றர் ஓட்டம்*

இ. கலிஸ்ரன் (யா/ கோப்பாய் மகா வித்தி), பா. கயூஸ்டன் (யா / அத்தியார் இந்துக் கல்லூரி), செ. நிரோசன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),

*800 மீற்றர் ஓட்டம்*

டெ. பகீரதன் (யா / அத்தியார் இந்துக் கல்லூரி), சு. கஜித் (யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்), செ. நிரோசன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),

*1500 மீற்றர் ஓட்டம்*

செ. நிரோசன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஜெ.நிதர்சன் (யா / அத்தியார் இந்துக் கல்லூரி), சு. கஜித் (யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்),

*நீளம் பாய்தல்*

தே. கஜீபன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), ஜெ. துஸ்யந்தன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), மு.கௌதமதாஸ் (யா / அத்தியார் இந்துக் கல்லூரி),

*உயரம் பாய்தல்*

ஜெ. துஸ்யந்தன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), செ. வானுஜன் (யா / அத்தியார் இந்துக் கல்லூரி), இ. டிலக்சன் (யா/ ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி),

*முப்பாய்ச்சல்*

தே. கஜீபன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), இ. டிலக்சன் (யா/ ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி), சி. யதுசன் (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி),

*குண்டெறிதல்*

வி. பிரதீபன் (யா / அத்தியார் இந்துக் கல்லூரி), சை. பவுணன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), ச. ஜனகன் (யா/ ஆவரங்கால் மகாஜன வித்தி)

*தட்டு எறிதல்*

ஜெ. துஸ்யந்தன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), தே. வின்சன் (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), ச. ஜனகன் (யா/ ஆவரங்கால் மகாஜன வித்தி)

---

# பிரிட்டனில் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த நடவடிக்கை

## அந்நாட்டு பிரதமர் தெரிவிப்பு

பிரிட்டனில் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை நீண்டகாலமாக மிக அதிகளவில் காணப்படுவதாகவும் நாட்டில் குடியேறுவோரின் நிகர அளவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்தியா மற்றும் வெளி நாடுகளிலிருந்து வந்து குடியேறியோர் மூலம் பிரிட்டனுக்கு சமூக மற்றும் கலாசார ரீதியில் பொருளாதார ரீதியில் அளவற்ற நன்மைகள் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது என்பதையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆனால் 1997 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரிட்டனுக்குள் வந்து குடியேறியோரின் எண்ணிக்கையில் அந்தக் காலப்பகுதியில் நாட்டில் இருந்து வெளியேறி வேறு நாடுகளில் குடியேறியோரின் எண்ணிக்கை போக எஞ்சியிருக்கும் நிகர குடியேறிகளின் எண்ணிக்கை 22 இலட்சம் பேர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல காலமாக மிகஅதிகளவில் இருந்து வரும் வெளிநாட்டுக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை பிரிட்டிஷ் சமூகங்களின் மீது அளவு கடந்த அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினார்.

அத்துடன் பிரிட்டனின் சமூகநல மேம்பாட்டுத் திட்டங்களே குடியேற்றவாசிகளின் இந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். நாட்டிலிருந்து வெளியேறுவோர் போக இங்கு குடியேறுவோரின் எண்ணிக்கையில் காணப்படும் நிகர அளவை ஆண்டுக்கு மிகக்குறைந்த மட்டத்தில் வைத்திருக்க வேண்டுமே தவிர பல ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் இருக்கக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் சமூகநலக் கொடுப்பனவு நடைமுறைகளில் கொண்டுவரப்பட்டுள்ள மறுசீரமைப்புகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியே இருந்து வருவோரின் தொழில் மற்றும் மாணவர் விசாக்களில் கொண்டுவந்துள்ள கட்டுப்பாடுகள் மூலமாகவும் அரசாங்கம் ஏற்கனவே இந்த இலக்கை அடைய முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

---

# இலவச நூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அருள்மிகு முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா நிகழ்வில் அம்பாளின் நேரடி ஒழுங்கமைப்பில் உருவாகிய சமய வளர்ச்சி கருதிய ஆத்மீக நூல் நாளை ஞாயிற்றுகிழமை இலவசமாக அடியார்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

இந்நூலினை அம்பாளின் அழகு வர்ணப்படமும் அற்புதங்களும் ஆத்மீகக் கட்டுரைகளும் பாடல்களும் சிறப்பிக்கின்றன.

வல்வெட்டி ஸ்ரீவாணி வெளி யீட்டக உரிமையாளர் சி.சிவகுமாரன் கடந்த ஆறு வருடங்களாக தொடர்ச்சியாக வெளியீடு செய்யப்பட்டது போல் இவ்வருடமும் ஏழாவது தடவையாக நூல் விநியோகிக்கப்பட உள்ளது. கடந்த இரு வருடங்களாக செல்வச் சந்நிதி முருகனுக்கு இவரால் பெருந் தொகையான நூல்கள் விநியோகிப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ

# உலகக் கிண்ண கிரிக்கெட் பரிசுப் போட்டி முடிவுகள்

நடந்து முடிந்த பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு உங்கள் வலம்புரி பரிசுப்போட்டி நடாத்தியது. தினம் ஒரு பரிசு என்ற மாபெரும் பரிசுப்போட்டியில் வெற்றிபெற்றோர் மற்றும் சரியான விடையை எழுதிய வாசகர்களின் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

இப் பரிசுப் போட்டிக்கு பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் தமது பங்களிப்பை வழங்கி ஆதரவையளித்தனர். அத்துடன் சரியான விடையை எழுதி ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை சமர்ப்பித்தனர். இவ்வாறு ஆதரவு வழங்கிய வாசகர்களாகிய உங்களுக்கு வலம்புரிக் குடும்பம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் இப்பரிசுப் போட்டிகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்கிய ஒலிம்பியா ஸ்போட்ஸ், M.C.S, அல்டி எலக்ரோனிக், நவகலா, Suntel ஆகிய நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தினம் ஒரு பரிசு – 3

***கடந்த ஒன்பது உலகக் கிண்ணத் தொடர்களில் மொத்தமாக எத்தனை சதங்கள் அடிக்கப்பட்டது?***

***விடை :- 103 சதங்கள்***

**பரிசு பெறுபவர் :- நா.சுந்தரலிங்கம் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

ஜெ.ஜோய்மாதவன் (மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்), சொ.தவராசா (ஜயனார் கலட்டி, பருத்தித்துறை), ஜெ.ஜெயக்கமலன் (அளவெட்டி வடக்கு), பி.புஷ்பராணி (டச்சு வீதி, கண்டுவில்), நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), சி.அருந்ததி (வித்தனை, வல்வெட்டித்துறை), அ.பிரகலாதன் (ஏழாலை வடக்கு), அ.சயந்தன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), சீ.சாந்தநாதன் (அல்வாய் தெற்கு, அல்வாய்), க.கலையமுதன் (மருதநகர், கிளிநொச்சி), க.கஜனன் (கோவிலாக் கண்டி சந்தி, கைதடி), கே.அரசேஸ்வரன் (கலைமகள் வீதி, நல்லூர்), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்)

## தினம் ஒரு பரிசு – 4

***உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் யார்?***

***விடை :- கிளென் மெக்ராத்***

**பரிசு பெறுபவர் :- ஜெ.ஜோய்மாதவன் (மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

சு.சிவலிங்கம் (குகன்குடிசை, பொலிகண்டி), அ.பிரகலாதன் (ஏழாலை வடக்கு), நா.சஞ்ஜீவன் (கரவெட்டி), கி.மோகனகுமார் (துரைராசா வீதி, வண்ணார் பண்ணை), த.சர்மிளா (அச்சுவேலி தெற்கு), கு.குபேரன் (மானிப்பாய்), அ.அகில்வனா (சிவன் வீதி, ஆவரங்கால்), ச.வரததாஸ் (மணற்புலம் கிழக்கு, அளவெட்டி), கி.மோகனகுமார் (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்), சீ.சாந்தநாதன் (அல்வாய் தெற்கு), க.கஜனன் (கோவிலாக்கண்டி, கைதடி), பா.மயூரி (இணுவில் கிழக்கு), நா.செந்தமிழ்ச்செல்வன் (குப்பிழான் தெற்கு, ஏழாலை), யு.டிலுக்சன் (நாவலர் வீதி, அரியாலை), எம்.பிரான்சிஸ் (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), க.கலையமுதன் (மருதநகர், கிளிநொச்சி), தே.ஜனந்தன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), சு.பிரபாகரன் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்), யோ.சயந்தன் (ஆவரங்கால்), ஜி.உமாக்கா (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), கா.கருத்சன் (சண்டிலிப்பாய்), இ.அருளானந்தன் (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.நவேதா (கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)

## தினம் ஒரு பரிசு – 5

***இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணி எது?***

**போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இதனால் சரியான விடை சமர்ப்பிக்கப்படவில்லை.**

## தினம் ஒரு பரிசு – 6

***உலகக்கிண்ண கிரிக்கெட் அரங்கில் அதிகபோட்டிகளில் விளையாடிய வீரர் யார்?***

***விடை :- ரிக்கி பொன்டிங்***

**பரிசு பெறுபவர் :- சி.புஸ்பராணி (1ம் ஒழுங்கை, டச்சு வீதி, கண்டுவில்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

சொ.தவராசா (ஜயனார் வீதி, பருத்தித்துறை), இ.கரன் (சுழிபுரம் மத்தி, சுழிபுரம்), த.செந்தூரன் (ஓடை லேன், வண்ணார்பண்ணை), ஜெ.ஜெயக்கமலன் (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), மு.சிவனு (மருதநகர், கிளிநொச்சி), ம.தர்ஷன் (டச்சுறோட், கண்டுவில்), கு.குபேரன் (மானிப்பாய்), ந.ரமணன் (காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்), க.தர்மலிங்கம் (நீர்வேலிச் சந்தி, நீர்வேலி), சு.சிவலிங்கம் (குகன்குடிசை, பொலிகண்டி), ந.உதயதரன் (விக்கினேஸ்வரா வீதி, இணுவில் தெற்கு), சி.சிந்துஜன் (கல்லாரை, மல்லாகம்), ந.விக்னேஸ்வரன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு), கி.மோகனகுமார் (துரைராசா வீதி, வண்ணார்பண்ணை), பா.ஜெயராஜ் (ஏழாலை தெற்கு, மயிலங்காடு), சி.செந்தாளன் (தெனியம்மன் கோவிலடி, வியாபாரி மூலை), சு.சோபியா (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 7


***உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் போட்டி ஒன்றில் குறைந்த ஓட்ட எண்ணிக்கையை எடுத்துள்ள அணி எது?***

***விடை :- கனடா***

**பரிசு பெறுபவர் :- தே.அரசேஸ்வரன் (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

சி.சேரன் (சாரையடி, புலோலி தெற்கு), எஸ்.திருமகள் (புளியங் கண்டு வீதி, ஆனைக்கோட்டை), ஸ்ரீ.விதூஷன் (கைதடி மேற்கு, கைதடி), த.சுஜேந்திரா (மணத்தறை வீதி, கந்தர்மடம்), சி.சிந்துஜன் (கல்லாரை, மல்லாகம்), ந.தர்மேந்திரன் 9ம் வட்டாரம், புங்குடுதீவு), ஜெ.ஜெயக்கமலன் (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), கு.குபேரன் (சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்), கு.சிந்துஜா (நவாலி வடக்கு, மானிப்பாய்), சி.ஜெயசீலன் (சுழிபுரம் மத்தி, சுழிபுரம்), தெ.தினேஸ் (கொம்மந்துறை, வல்வெட்டித்துறை), க.தார்மீகன் (கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), கு.அசோக்காந் (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), கி.கபில்



(பூலசிட்டி, அச்செழு), நா.சுந்தரலிங்கம் (தொட்டிலடி சண்டிலிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 8

***உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் போட்டி ஒன்றில் அதிக ஓட்ட எண்ணிக்கையை எடுத்துள்ள அணி எது?***

***விடை :- இந்தியா***

**பரிசு பெறுபவர் :- ச. திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைகோட்டை)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

ச.இளங்கீரன் (கரவெட்டி மத்தி, கரவெட்டி), ப.ஜெயக்குமார் (புது வீதி, கொய்யாத்தோட்டம்), க.குணசிங்கம் (நெல்லியடி வடக்கு, கரவெட்டி), செ.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), ஞா.செந்தமிழ் செல்வன் (குப்பிழான் தெற்கு, ஏழாலை), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்)செ.குணரத்தினம் (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)சி.செந்தாளன் (தெனியம்மன் கோவிலடி, வியாபாரி மூலை), கு.கிருசாந்தி (பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), சொ.தவராசா (ஜயனார் வீதி) ஏ.சர்மிளா (கதிரவேலு ஒழுங்கை, அரியாலை), ஏ.சயந்தன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), நா.சுந்தரலிங்கம் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்), சு.ரமேஸ்காந்த் (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), ம.சசிகரன் (பழைய தபாற்கந்தோர் வீதி சங்கானை). போ.ஜீவிதா (புகையிரத வீதி, யாழ்ப்பாணம்), அ.சிவநாதன் (சோதிவேம்படி வீதி, மானிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 9

***இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்டு உலகக் கிண்ண கிரிக்கெட் நடைபெறும் மைதானங்கள் எவை?***

**விடை :- பல்லேகலை முரளிதரன் சர்வதேச மைதானம், அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானம்.**

**பரிசு பெறுபவர் :- சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

கு.கயல்விழி (அச்சுவேலி தெற்கு), பி.சாமினி (அல்வாய் கிழக்கு), எம்.சியாம் (தோப்பூர்), பொ.கிருசாந்தன் (அம்பாள் குளம், கிளிநொச்சி), எஸ்.பலேகுமார் (தும்பளை, பருத்தித்துறை), கு.குலறயனி (பலாலி வீதி, கந்தர்மடம்), இ.பிரணவநாத் (புதுவளவு, கோப்பாய் தெற்கு), ப.உதயகுமார் (மஞ்சத்தடி வீதி, இணுவில் கிழக்கு), ஜெ.ஜெயக்கமலன் (அளவெட்டி வடக்கு அளவெட்டி), சி.செந்தில் நாதன் (கோண்டாவில் கிழக்கு), ஞா.செந்தமிழ் செல்வன் (குப்பிழான் தெற்கு, ஏழாலை), செ.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), க.பவிதாரகா (நந்தாவில் லேன், கொக்குவில்), எஸ்.திருமகள் (புளியங் கண்டு வீதி, ஆணைக்கோட்டை), நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), வி.மகாலட்சுமி (தெனியம்மை ஒழுங்கை, வல்வெட்டித்துறை) கு.குபேரன் (சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்), ந.சுஜேந்திரா (மணல்தறை வீதி, கந்தர்மடம்), எஸ்.கலைவானி (வீடியோ கலாமினி, அச்சுவேலி), க.பருசாட்சரலிங்கம் (உரும்பிராய் வடக்கு), ம.சசிகரன் (சங்கானை), இ.யுரெனஸ்ட் (உதயசூரியன் வீதி, உடுவில்), க.கனேசமூர்த்தி (தொல்புரம் கிழக்கு சுழிபுரம்), கே.மேகலா (அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை)

***(தினமொரு கேள்வி போட்டிக்கான மிகுதி விபரங்கள் நாளை தொடரும்)***

# திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

14-II

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

சித்திரைப் புத்தாண்டு இனிதாக பயிர் பச்சையெங்கும் நிறைந்து உழவுத்தொழில் சிறந்து எங்களுறவுகளனைவரும் இன்புற்றிருக்க வாழ்த்துக்கள்.!

வாழ்த்துக்களும் கொண்டாட்டங்களும் அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கும் இவ் வேளையில் உலகின் தொழில்நுட்பத்தில் அதீத வளர்ச்சி கண்ட நாடுகளில் ஒன்றான ஜப்பானில் நிலநடுக்கமும் சுனாமியும் கோரத் தாண்டவமாடிய ஒரு மாதத்தில் மீண்டும் பூமித் தாய் நடுங்கியிருக்கிறாள். இப்போதும் உயிர்ப் பலியுடன் சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இயற்கை அனர்த்தங்களாக இவற்றை வகைப் படுத்தினாலும் விளக்க முற்பட்டாலும் இது வரை நடந்தேறிய இயற்கை அனர்த்தங் களுடன் ஒப்பிடுகையில் ஜப்பான் நாடு சந்தித் தது பலமடங்குகள் பெரியதே. இயற்கை சீறிச்சினக்க முடிவு செய்திருப்பது எவருக் குமே நல்லதல்ல.

இயற்கை அனர்த்தங்கள் ஒருபுறமிருக்க இன்னொரு பக்கத்தில் பச்சை வீட்டு வாயுக் களின் செறிவினால் வெப்பமதிகரிப்பதுவும் இதனால் காலநிலை மாற்றங்கள் நிகழத் தொடங்கியிருப்பதனை நாம் உணரக் கூடிய தாயுள்ளது.

காலநிலை மாற்றத்தின் பாதிப்பு வளர்ந்து வரும் நாடுகளின் விவசாயத்தில் நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப் பட்டிருப்பினும் அதன் விளைவுகளை அவ தானிக்கக் கூடியதாயுமுள்ளது. குறிப்பாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் விவ சாயத்தில் இவ்வகையான பாதிப்பு குறிப்பாக விவசாயத்திற்கான வளங்களின் கிடைத்தன் மையை கேள்விக் குறியாக்குவதுடன் அப் பயிர்களில் பீடைகளின் சேதத்தையும் அதி கரிக்க வாய்ப்புக்களுண்டு. மாறிவரும் கால நிலைக்குகேற்ப பீடைகள் தம்மை இயை பாக்கி பல்கிப் பெருக வாய்ப்புக்களதிக மென்ப தனை இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இனிவருங் காலத்தில் இப்பீடைகளுடன் மல்லுக்கட்டும் நிகழ்வுகள் அதிகம் இடம் பெறப் போகின்றது என்பதனை கட்டியங் கூறும் நிகழ் வாக இதனை எடுத்துக் கொள்ளலாம்.

விவசாயப்பெருமக்களுக்கு தலையிடி யாக இருக்கும் பீடைகளைப் பற்றி தனித்தனி யாக பயிர்சார்ந்து ஆய்ந்து பார்க்கும் இக் கட்டுரைத் தொடர் பீடைகளின் குணாதிசயங் கள், அவற்றை இனங்காணுதல் மற்றும் அவற்றினாலேற்படும் சேதங்களின் தன்மை இவையனைத்தையும் இலகு தமிழில் அனை வரும் வாசித்தறிந்து கொள்ள எடுத்திருக்கும் முயற்சியேயாகும். வலம்புரியினூடாக இச் செய்திகளை எம்மினிய உறவுகளுக்கு தரு வதில் மகிழ்வுறும் இவ்வேளையில் இக்கட்டு ரைத் தொடர் பற்றிய உங்கள் அபிப்பிராயங் களை வலம்புரிக்கு தொடர்ந்து எழுதுங்கள். உங்களது கருத்துக்களை செவிமடுத்து இவ் விடயங்களை தொடர்ந்தும் தர விரும்புகிறோம்.

திராட்சை செய்கையாளர்களை அதிக மாக கொண்டிருக்கும் குடாநாட்டில் காலநிலை மாற்றமடைவது அவதானிக்கப்பட்டிருக்கும் நிலையில் இலங்கை முழுவதுமாகவே இக் காலநிலை மாற்றத்தின் அனுகூலம் பீடை களின் பெருக்கத்திற்கு வழிசமைப்பதாகவே இருக்கின்றது. குறிப்பாக வளிமண்டல வெப்ப நிலையில் ஏற் படுகின்ற உயர் ச்சி நேரடியாக வே பீடைத் தாக் கத்திற்கு உதவி செய்வதுடன் இன்னும் இப் பிரச்சினை அதிகரிப்புக்குள் ளாக இருப்பத னை நாமனை வரும் உணர் ந்து கொள்ள வேண்டும்.



இது பற்றி விளக்கி சென்றால் நல்லதென் பதால் சூழல் சார்ந்த விடயங்களுக்கும் இடங் கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராட்சையில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி பீடைகளுள் முதன்மையானது பனிப் பூச்சியாகும். பனிப்பூச்சியின் சேதம் தற்போது பல பயிர்களில் உணரப்பட்ட நிலையில் இங்கே இப்பூச்சிப் பீடைபற்றி விரிவாக விளக்க முனைந் துள்ளேன். வாருங்கள் பீடைக்குள்ளிருக்கும் சிறப்பியல்புகள் எம்மை திகைக்க வைக்கின் றன என்பது என்னவோ உண்மைதான். ஆனாலும் இதற்குள் இச்சிறிய ஜந்துக்குள் இவ்வளவு சக்தியா. அனைத்தும் டாவினின் கூர்ப்புக் கொள்கையினுள் உள்ளடங்கிய சமாச்சாரம் தான்.

கலப்பகோஸ் தீவுகளில் சாள்ஸ் டாவின் கண்டுணர்ந்த பறவைக்கூட்டங்களை அவை தப்பிப் பிழைக்கும் இயல்பை "Survival of the fittest" என அதை 'தக்கன பிழைத்தல்' என்று கொள்கையாக்கினார். தாம் இருக்கின்ற சூழல் தொகுதியில் தப்பிப் பிழைக்கும் ஆற்ற லுள்ளவையே தப்பிக்கும். ஏனையவை இறந்துவிடும் என்பது பொருத்தப் பாடானதே. அந்த வகையில் பனிப் பூச்சியும் தப்பிப்பிழைக்கும் ஆற்றலைக்கொண்டு பயிர்களில் பாரிய சேதத்தை ஏற்படுத்துகின் றது எனலாம்.

### திராட்சையில் பனிப்பூச்சி

திராட்சையில் சேதத்தை ஏற்படுத்தும் பனிப்பூச்சியை Scirtothrips dorsalis வகையைச் சார்ந்தது. இது சுரண்டி உறிஞ்சும் வாயுறுப்பைக் கொண்டதால் பயிர் இலையின் மேற்பரப்பில் உறிஞ்சுவதனால் சுரண்டப்பட்ட பகுதியிலுள்ள கலங்கள் இறக்க இலைமேல் நோக்கி சுருளும். இந்த மேல் நோக்கி சுருளும் அறிகுறியை ஏனைய பயிர்களிலும் காண லாம். மிளகாய் செடியில் ஏற்படும் குருமன் அல்லது இலச்சுருளுக்கு பனிப்பூச்சியே காரணமாகும்.

இப்பனிப் பூச்சி திராட்சையுடன் மிளகாய், மாதுளை, நிலக்கடலை ஆகிய பயிர்களுடன் மேட்டுநிலப் பயிர்செய்கையில் வளரும் இரு வித்திலை களைகளிலும் விருத்தியடையும். பல பயிர்களையும் இருவித்திலை களைகளை யும் விருந்து வழங்கிகளாக கொண்டிருக்கும் இப்பனிப்பூச்சியின் திறன் எப்படிப்பட்டது? இதனாலேயே ஒன்று மாறி ஒன்றில் பல்கிப் பெருகி விருத்தியடைந்துவிடும். (தொடரும்)

# காணிகள் அளவிடப்படாமையால் நாச்சிக்குடா மக்கள் பெரும் அவலத்தில்

கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடாவில் மக்களுக்கு அனுமதிக்கப்பட்ட காணிகளை இதுவரை அளவீடு செய்து வழங்காமையால் அவர்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவ தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாச்சிக்குடா வில் சாந்தி வனம் என்னும் கிராமத்தில் வசிக் கும் மக்களுக்கு தலா ஒரு ஏக்கர் என்ற அடிப்படையில் காணிக்கான அனுமதிப்பத் திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரை இந்தக் காணிகள் அளவீடு செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் சுமார் 40 குடும்பங்கள் தாம் விரும் பிய இடங்களில் தற்காலிக வீடுகளை அமை த்து வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், விதிகளுக்கு அமைவாகக் காணி கள் அமைந்திருக்காத காரணத்தால் இவர் களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டங்களை வழங்கு வதில் அதிகாரிகள் அக்கறை காட்டாமல் உள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் பல தடவைகள் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத் தியுள்ளபோதிலும் உரிய நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லையெனத் தெரி வருகின்றது.

மேலும் குறித்த பிரதேசத்துக்கு வந்த நில அளவையாளர்கள் சிலர் இந்தக் கிராமத்துக் கான வீதி அமைப்பது தொடர்பாகவே கவனம் செலுத்தியுள்ளனர். ஆனால், மக்களின் காணி களை அளப்பது தொடர்பாக எந்த நடவடிக் கையும் இவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. இதுபற்றி அவர்களிடம் மக்கள் கேட்ட போது போதுமானஅளவுபணியாளர்கள்இல்லையெனப் பதிலளிக்கப்பட்டது. இந்த நிலையே நாச்சிக் குடாவின் ஏனைய பகுதிகளிலும் நிலவுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# நூல்வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தேவி பாகவதக் கதைகள் நூல் வெளி யீடும் அறநெறிப் பாடசாலை மாணவர் பரி சளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் சிவகாமி அம்பாள் அன்னதான மண்டபத்தில் இணு வில் சைவத் திருநெறிக்கழகத் தலைவர் கெ.தவராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையினை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அறங் காவலரும் அதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், நூல் மதிப்புரையை செஞ் சொல்வர்ணர் இரா.செல்வவடிவேல் ஆகி யோர் ஆற்றவுள்ளனர். (ஸ்ரீ-2)

# கப்பம் கோரலுடன் தொடர்புடைய பொலிஸ் உயரதிகாரி கைது

ஐம்பது இலட்சம் ரூபா கப்பம் கோரல் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உய ரதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ பீட மாணவர் ஒருவரை படு கொலை செய்யாதிருப்பதற்காக கப்பம் கோரிய நபர்களுக்கே குறித்த பொலிஸ் உத்தியோ கத்தர் ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குருவிட்ட பிரதேச பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத் தரை நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை யில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. மருத்துவபீட மாணவரின் பெற்றோரினால் கப்பக்காரர்களுக்கு 30 இலட்ச ரூபா கப்பம் வழங்கப்பட்டு மிகுதி 20 இலட்ச ரூபாவினை பெற்றுக்கொள்ள முயற்சித்த போது இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசா ரணைகளின் போது கிடைக்கப்பெற்ற தகவல் களின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோ கத்தர் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# மதுபோதையில் தாக்குதல் நடத்திய நான்கு இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

மதுபோதையில் தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டின் பேரில் டுபாயில் நான்கு இலங் கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாய் அல்ரபா பகுதியில் காணப்படும் ஹோட்டல் மற்றும் சிகை அலங்கரிப்பு நிலை யம் ஆகியவற்றில் கடமையாற்றிய இலங் கையர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல் சம்பவத்தில் மூன்று இலங்கை யர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருவதாகக் குறிப்பிடப் படுகிறது.

புதிதாக ஹோட்டல் ஒன்றினை ஆரம் பித்ததனால் ஏற்பட்ட தொழிற் போட்டியே இந்த மோதலுக்குக் காரணம் எனவும் கைது செய் யப்பட்ட இலங்கையர்களுக்கு எதிரான விசார ணைகள் எதிர்வரும் நாட்களில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# விசர்நாய்க் கடியினால் ஏற்படும் மரணத்தைக் கட்டுப்படுத்த திட்டம்


(கொழும்பு)

விசர்நாய்க் கடியினால் ஏற்படும் மரணங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மக்களைத் தெளிவுபடுத்தும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு கால்நடை வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் பிரகாரம் பத்து இலட்சம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசர்நாய்க்கடி ஒழிப்பதற்கான கால்நடை வைத்தியர்கள் ஒன்றியத்தின் போஷகர் டாக்டர் சமித் நாணயக்கார குறிப்பிட்டார்.

விசர்நாய்க்கடி தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்படுவதே இலங்கையில் விசர்நாய்க்கடியினால் ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கை உயர்வடையக் காரணமாக அமைகின்றது என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நடுவீதியில் கற்குவியல்கள்; போக்குவரத்துக்கு இடையூறு



பூநகரி மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் 10 இற்கும் மேற்பட்ட கற்குவியல்கள் நடுவீதியில் குவிக்கப்பட்டுள்ளது.

வீதி வேலை ஒப்பந்தக்காரர்களால் கனரக வாகனங்கள் மூலம் இவை குவிக்கப்பட்டுள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்களும் பயணிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக இவ்வீதியால் 800 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் 40 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-84)

# அமைச்சர் மேர்வின் சிங்கள திரைப்படத்தில் நடிக்கவுள்ளார்

(கொழும்பு)

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா சிங்கள திரைப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் மேர்வின் சில்வா துட்டகைமுனு மன்னரின் வேடத்தில் இந்த திரைப்படத்தில் தோன்றவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அடிக்கடி பொதுமேடைகளில் துட்டகைமுனு மன்னர் தமது மூதாதையர் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுரங்கனா லொவின் எவில்லா என இந்தத் திரைப்படத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தில் எல்லாள மன்னரின் கதாபாத்திரமொன்றும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கை மீனவர்கள் ஐவர் தொடர்ந்தும் தடுப்புக் காவலில்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த மேலும் ஐந்து மீனவர்கள் தொடர்ந்தும் இந்திய தடுப்புக் காவலில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கைது செய்யப்பட்ட எட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் மேலும் ஐந்து பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இலங்கை மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த 5 மீனவர்களும் கடந்த 7 ஆம் திகதி முதல் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# கிளி.மாவட்டத்தில் 35 கரையோர கிராமங்கள் அபிவிருத்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 4 உதவி அரச அதிபர் பிரிவுகளில் 35 கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி அரச அதிபர், நெக்ரெப் திட்டப் பணிப்பாளர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவுகளிலேயே மேற்படி கிராமங்கள் அபிவிருத்திக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-3-10)



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தினால் ஜெட்லைனர் கப்பல் சவாரிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவான அதிர்ஷ்டசாலிகளில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் முதற்கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களை நிறுவனத்தின் செலவில் யாழ்.மாவட்ட விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் து.நிறோஜன் அனுப்பி வைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: பொலிகண்டிச் செய்தியாளர்)

2011.04 16

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1346 - தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான் சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.

★ 1444 - இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

★ 1582 - ஸ்பானிய ஆக்கிரமிப்பாளன் ஹெர்னாண்டோ டி லேர்மா என்பவன் ஆர்ஜெண்டீனாவின் சால்ட்டா என்ற குடியேற்றத் திட்டத்தை கண்டுபிடித்தான்.

★ 1853 - இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை மும்பையில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1876 - பல்கேரியாவில் ஒட்டோமான் பேரரசுக்கெதிராக புரட்சி வெடித்தது.

★ 1885 - இலங்கையில் அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்ட முறை அறிமுகமானது.

★ 1912 - ஹரியெட் குயிம்பி என்னும் பெண் ஆங்கிலக் கால்வாயை விமானத்தில் கடந்த முதல் பெண் ஆனார்.

★ 1917 - நாடு கடந்த நிலையில் பின்லாந்தில் இருந்த விளாடிமிர் லெனின் சென் பீட்டர்ஸ்பேர்க் திரும்பினார்.

★ 1919 - அம்ரித்சர் படுகொலையைக் கண்டித்து மகாத்மா காந்தி ஒரு நாள் உண்ணா நோன்பு இருந்தார்.

★ 1925 - பல்கேரியாவின் தலைநகர் சோஃபியாவில் சென் நெடேலியா ஆலயத்தில் கம்யூனிஸ்டுகள் தாக்கியதில் 150 பேர் கொல்லப்பட்டு 500 பேர் படுகாயமடைந்தனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: செம்படையினர் ஜேர்மனியப் படைகளுக்கெதிரான தமது கடைசிப் போரில் பொலினைச் சுற்ற ஆரம்பித்தனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: அகதிகளை ஏற்றிச் சென்ற கோயா என்ற ஜேர்மனியின் கப்பல் ஒன்று சோவியத் நீர்மூழ்கியால் தாக்கப்பட்டு மூழ்கியதில் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1947 - ஐக்கிய அமெரிக்கா, டெக்சாசில் துறைமுகத்தில் நிற சரக்குக் கப்பல் ஒன்று வெடித்ததில் டெக்சாஸ் நகரம் தீப்பிடித்தது. 600 பேர் இதில் கொல்லப்பட்டனர்.

★ 1947 - சோவியத் - ஐக்கிய அமெரிக்கா இடையேயான உறவுகளை பனிப்போர் என அமெரிக்க பொருளாதார ஆலோசகர் பேர்னார்ட் பரெக் என்பவர் முதன் முதலாக வர்ணித்தார்.

★ 1966 - முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பமானது.

★ 1972 - நாசாவின் அப்போலோ 16 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 2007 - ஐக்கிய அமெரிக்காவின் வேர்ஜீனியா பல்கலைக்கழகத்தில் கொரிய மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழகப் பேராசிரியர் லோகநாதன் உட்பட 33 பேர் கொல்லப்பட்டு 29 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

★ 1844 - அனத்தொலி பிரான்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரான்சு எழுத்தாளர் (இ.1924)

★ 1867 - வில்பர் ரைட் முதன்முதலில் எஞ்ஜின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர். (இ.1912)

★ 1889 - சார்லி சாப்ளின், நடிகர் (இ.1977)

★ 1927 - பாப்பரசர் பதினாறாம் ஆசீர்வாதப்பர், உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 265ஆவது பாப்பரசர்

★ 1935 - சுபத்திரன், ஈழத்து முற்போக்கு இலக்கியக் கவிஞர் (இ.1979)

★ 1947 - கரீம் அப்துல்-ஜப்பார், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

★ 1957 - பெரியசாமி சந்திரசேகரன், இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் அரசியல் தலைவர், தொழிற்சங்கவாதி

★ 1985 - லுவால் டெங், பிரித்தானிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

☆ 1908 - அப்புக்குட்டி கிங்ஸ்பரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியர்

☆ 1972 - யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர் (பி.1899)



1851ஆம் ஆண்டு இந்நாளில்தான் சேர் பொன்னம்பலம் இராமநாதன் பிறந்தார். (இ-1930)

# ஆனந்தத்தின் வழி

**ஆனந்தம் இப்போதே இங்கேயே...**


ஒரு இடத்தில் மூன்று பேர் வேலைசெய்து கொண்டிருந்தார்கள். அந்தவழியாகச் சென்ற வழிப் போக்கர் ஒருவர், அந்த மூவரில் ஒருவரைப் பார்த்து இப்படிக் கேட்டார் "இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

அதற்கு அவன், "உனக்கு கண் பார்வை கிடையாதா என்ன? பார்த்தால் தெரியவில்லை... கல்லை செதுக்கிக்கொண்டிருக்கிறேன்" என்று எரிச்சலோடு பதில் கூறினான்.

அந்த வழிப்போக்கர், இரண்டாம் நபரிடமும் இதேகேள்வியைக் கேட்டார். அதற்கு அவன் "என் வயிற்றுப்பிழைப்புக்காக என்னவோ செய்து கொண்டிருக்கிறேன்..." என்று கூறினான். மூன்றாம் நபரிடமும் இதேகேள்வியைக் கேட்டார் வழிப்போக்கர். கேட்டது தான் தாமதம்.. ஆனந்தமாகக் குதித்துக் கொண்டே அவன், "இங்கு ஒரு அற்புதமான கோயிலைக் கட்டிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

மூவரும் ஒரே வேலையைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவனுடைய அனுபவத்தில் அது வெறும் கல்லை வெட்டும் வேலைதான்; இன்னொருவனுக்கோ அது வயிற்றை நிரப்புவதற்கான ஏதோ ஒரு வேலை என்பதைத்தாண்டி எதுவுமில்லை; மற்றொருவனுடைய அனுபவம், அற்புதமான கோயிலை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது!

ஆக, உங்கள் வாழ்வின் தரத்தை மாற்ற வேண்டு மென்றால், நீங்கள் செய்யும் செயலை மாற்றத் தேவையில்லை. அதை எப்படிச் செய்கிறீர்கள்; எந்தக் கண்ணோட்டத்தில் அதைச் செய்கிறீர்கள் என்பதை மாற்றினாலேபோதும். எதையும் எதிர்பார்த்துச் செயற்படாதீர்கள்;



எதிலும் ஆதாயக்கணக்குப் போட்டுக் கொண்டு இருக்காதீர்கள்.


இப்படிச் சொல்வதன் மூலம் உங்களைப் பிச்சைக்காரர்கள் போல தெருவிலே அலையவிடும் உத்தேசம் எனக்கில்லை. எப்படிச் செய்கிறோம் என்பதில் தான் மாற்றம் வேண்டுமே தவிர, செய்யும் வேலையை மாற்றுவது பற்றி நாம் பேசவில்லை; அப்படியே இதை மாற்றினாலும் ஒன்றும் பயனில்லை; அதனால் எந்த மாற்றமும் நிகழப் போவது இல்லை. நீங்கள் அணியும் உடைகளை மாற்றுவதாலோ, உண்ணும் உணவை மாற்றுவதாலோ, வழிபடும் இடத்தை மாற்றுவதாலோ, உங்கள் வாழ்வின் தரம் மாறப் போவதில்லை; இல்லையா?

உங்கள் வீட்டிலிருந்து நீங்கள் ஆசிரமத்திற்கே வந்துவிட்டாற்கூட உங்கள் பிரச்சினை இன்னும் அதிகமாகத்தான் ஆகும். வீட்டிலிருக்கும் நாலுபேருடனே உங்களுக்குப் பிரச்சினை வருகிறது என்றால், ஆயிரம் மனிதர்கள் இருக்கும் இடத்தில் எத்தனை பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்?

உங்கள் அலுவலகத்திற்கு நீங்கள் செல்லும்போது, 'இங்கே நடக்கும் வேலைகளில் என்னுடைய பங்களிப்பை முழுமையாக அளிக்கப் போகிறேன்' என்று உன்னதமான உணர்வோடு வேலை செய்யலாம். நீங்கள் இப்படிச் செயற்பட்டால் உங்களுக்குச் சம்பளம் தரமாட்டார்களா என்ன? கட்டாயம் எப்போதும் போலவே உங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும், இல்லையா?

ஆனால், மாதம் முழுவதுமே 'சம்பளம்! சம்பளம்! சம்பளம்!' என்பதைப் பற்றியே நினைத்துக் கொண்டு துயரமாக இருந்துவிட்டு, அந்த ஒரு நாளில், சம்பளம் வாங்கும் அந்த ஒருநாளிலும்கூட அது உங்களுக்குப் போதாது. எப்போதும் இப்படித்தான் இல்லையா? உங்கள் சம்பளம் ஒருபடி அதிகரிக்கும் போது, அதைவிட இரண்டுமடங்கு அதிகமாக உங்கள் வாழ்க்கைத் தேவைகளை நீங்கள் அதிகரித்து இருப்பீர்கள்.

ஆக, நீங்கள் எதைச் செய்கிறீர்கள்; அல்லது எதைச் செய்யவில்லை என்பதைப் பற்றிக் கேள்வியே இல்லை. உங்கள் வாழ்வு எப்படி மாறப்போகிறது என்பதைப் பற்றியதுதான் கேள்வி. மாற்ற வேண்டியது சூழ்நிலைகளை அல்ல; மாறவேண்டியது உங்கள் அணுகுமுறைதான்.



**ஆன்மீகம் 26**

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# எண்தமிழ்-ஓர் ஆய்வு

**01**

நவீன எண்கள் தமிழிலிருந்தே தோன்றின எனும் கருத்தை வெளிப்படுத்தும் "எண் என்ப ஏனை எழுத்தென்ப" எனும் நூலின் சுருக்கம் இங்கு முன் வைக்கப்படுகிறது. தமிழுலகம் இதனைச் சீர்தூக்கிப்பார்க்கும் என்பது நம்பிக்கை.

ஐரோப்பாவில் பரவலாக வாழ்ந்த ஆரியர்கள் இருபதாக (Vigesimal System) எண்ணியுள்ளனர். வேல்ஸ் மொழியில் 20, Ugain எனவும் 40, இரு இருபதுகள் என Deugain எனவும் 60, முவிருபது என Triugain எனவும் குறிப்பிடப்படுகின்றது. பிரஞ்சு மொழியில் 20, Vingt எனவும் 80 நாலு இருபது என Ouatre-Vingts எனவும் 92 நாலு இருபதுடன் பன்னிரண்டு என Quatre-Vingt-Douze எனவும் குறிப் பிடப்படுகின்றது.

டனிஸ் மொழியில் 60, மூவிருபது என Trisindstyve எனவும் 80 நாலு இருபது எனவும் அழைக்கப்பட்டது.[2]

டாக்டர் மு. வரதராசனும் தன்னுடைய 'மொழிவரலாறு' என்னும் நூலில் பாஸ்க்(Bbasque) மொழியிலும் டச்(Dutch) மொழியிலும் கோதிக்(Gothic) மொழியிலும் அதன் இன மொழிகளான ஏனைய பல ஜேர்மன் மொழிகளிலும் இருபதாக எண்ணப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார்.[3]

காகாசஸ்(Caucasian) மொழிகளிலும் செமற்றிக் மொழிகளிலும் ஏனைய உலகின் பல பாகங்களிலும் இருபதாக எண்ணும் முறை இருந்துள்ளதாக பிரித்தானிய கலைக்களஞ்சியத்திலும் குறிப்பிப்பட்டுள்ளது.[4]

ஆனால், அனைத்துத் திராவிட மொழிகளிலும் பதிற்றுகக்ளாக Decimal System) எண்ணும் முறையே காணப்பட்டுள்ளது.

ஆரிய எண்களில் 9ஐக்குறிக்கும் சொல் புதிய என்னும் பொருள் கொண்ட உரிச்சொல்லை ஒத்ததாக உள்ளது. லத்தீன் மொழியில் புதியது நொவெஸ் எனவும் 9ஐ நொவெம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. பிரான்ஸ் மொழியில் நியூப் என்னும் சொல் புதியது, ஒன்பது எனும் இரண்டையும் குறிக்கின் றது. ஜேர்மன் மொழியில் நியூ என்னும் பதம் இவ்விருகருத்தையும் கொடுக்கின்றது.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

சமஸ்கிருதத்தில் புதியது நவ எனவும் 9 நவ்ஸ் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் செமிற்றிக் மொழிகளான அக்காடிய, எபிரேய, சிரிய, அரேபிய எதியோப்பிய மொழிகளுக்கும் இப்பண்பு பொருந்தும் என யுனஸ்கோ கூரியரில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.[5]

எனினும் எல்லாத்திராவிட மொழிகளிலும் 9 தொன்மை அல்லது தொலைவு என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. ஒன்பது அடிப்படை எண்களில் ஒன்று. இரண்டு, முன்று... ஒன்பது என எண்ணும் ஒழுங்கில் தொலைவில் உள்ளது ஒன்பது அல்லவா?

மேலும் பழந்தமிழர் 9ஐக் குறிக்கத் தொண்டு என்னும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

"இரண்டென, மூன்றென, நான்கென, ஐந்தென, ஆறென, ஏழென, எட்டென, தொண்டென"

(பரிபாடல்-3ஆம்பாடல், வரி78-78)

தொண்டுக்கிழவர் என்பது மிகவும் வயதில் கூடிய கிழவரைக்குறிக்கும். அதே போல ஒன்பது அடிப்படை எண்களிலும் மிகவும் பருமனில் கூடிய எண் தொண்டு ஆகும். ஆதலால் 9 என்னும் எண்ணைக் குறிக்கும் சொல் கருத்துடன் அமைவது திராவிட எண்களில் மாத்திரமேயாகும்.

ஆரிய மொழிகளான லத்தீன், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஸ்பானிஸ், பிரான்ஸ் போர்த்துக்கீஸ், டச்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளில் 10-20 வரையான எண்களை குறிப்பிடும் போது பத்தின் வலுக்களின் இறங்கு வரிசைக்கு ($10^3, 10^2, 10^1, 10^0$) முரணாக ஒன்றுக்கள் முதலிலும் பின் பத்தும் குறிப்பிடப்படுகின்றது. உதாரணம் (ஏகாதாச) அரேபிய மொழியில் 24ஐ அர்பா(4) முதலிலும் இஸ் ரூன்(20) அதை அடுத்தும் வர அர்பா இஸ்ரூன் எனக்குறிப்பிடப் படுவதிலிருந்து செமிற்றிக் மொழிகளுக்கும் இப்பண்பு பொருந்துகிறது. எனினும் எல்லாத் திராவிட மொழிகளிலும் 10இன் வலுக்களின் இறங்கு வரிசை முரண்படாத வகையில் பத்து முதலிலும் ஒன்றுக்கள் அதையடுத்தும் வர அமைந்துள்ளன. அதனால் ஒரு சீர்மைப்பண்பு திராவிட மொழிகளுக்கே பொருந்தும்.

நவீன எண்கள்பற்றிக் குறிப்பிடும் முக்கிய அதாரமாக செவரஸ் சீபொக் (Sebokht)எனும் மொசபத்தேமிய அறிஞரின் கருத்தைக் குறிப்பிடலாம். இவர் எண்குறியீடுகளின் சிக்கனத்தன்மையையே குறிப்பிட்ட எண்ணல் முறையின் உயர்வுக்குக் காரணமெனக் குறிப்பிட்டுள்ளார்.[6]

ஆரியமொழியில் சமஸ்கிருதமும் திராவிட மொழியில் தமிழுமே இங்கு ஒப்பு நோக்க வேண்டியவையாகும். சமஸ்கிருதத்தை நோக்கும் போது[7] ஒற்றைப்படை எண்களுக்கு 9 குறியீடுகளும் 10-90 வரையான பத்துக்களுக்கான் ஒன்பது குறியீடுகளும் 200,300 என்பவற்றைக்குறிக்க 100 என்னும் எண்ணின் குறியீட்டுடன் வலது புறமாக முறையே 1,2என்னும் எண்களின் குறியீடுகள் இடப்படும்.

**செல்வி. க. நீலாம்பிகை**

ஆதேபோல் 2000,3000 ஐக் குறிக்க 1000 என்னும் எண் குறியீட்டுடன் வலது புறமாக 1,2 எண் குறியீடுகள் இடப்படும். ஆகவே 3000 வரை குறிப்பிட ஒன்றுக்கள்-9பத்துக்கள்-9,நூறுக்கள்-2, நூறு, ஆயிரம் என்பவற்றிற்கு இரண்டுமாக 24 குறியீடுகள் பயன்படுத்தப்படும். ஆனால் தமிழில் மூவாயிரம் வரை குறிக்க 9 அடிப்படைக் குறியீடு களுடன் பத்து, நூறு,ஆயிரம் ஆகியவற்றின் மூன்று குறியீடுகளுமாக 12 குறியீடுகள் போதுமானவையாகும். ஆதலால் செவரஸ் சீபொக் குறிப்பிட்ட சிக்கனத் தன்மை தமிழிற்கே பொருந்தும்.

(தொடரும்)

# 'கர' வருடம் உங்களுக்கு எப்படி?




**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்).**

**வருகிற மாற்றம் வளம் சேர்க்கும்! வருங்காலத்தை நலமாக்கும்!**

உதவிகள் செய்வதன் மூலம் பல பதவிகளைப் பெறும் கடக இராசி நேயர்களே!

பொது நலத்தில் அதிக ஆர்வம் காட்டும் உங்களுக்கு இந்த புத்தாண்டு புதிய பொறுப்புகளையும் பதவிகளையும் வழங்கப் போகிறது.

வருடத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சந்திரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அப்புறமென்ன, வருடம் முழுவதும் வசந்த காலம்தான்.

பொதுவாக, குரு பார்க்க இந்த ஆண்டு பிறக்கிறது. குரு பார்க்கக் கோடி நன்மை என்பதற்கேற்ப, கர வருடம் கண்ணேறு படும் விதத்தில் உங்களுக்கு முன்னேற்றங்களைக் கொடுக்கப்போகிறது. எண்ணங்களை எளிதில் செயலாக்குவது இறைவழிபாடுதான். எனவே, கிரகங்கள் வக்கிர நிலையில் இருக்கும் பொழுதெல்லாம் அலங்காரம், அபிஷேகம், ஹோமங்கள்செய்து வளங்களையும் நலன்களையும் வரவழைத்துக் கொள்ளலாம். மற்ற காலங்களில் அர்ச்சனைகள் செய்து மகத்தான பலன் காணலாம்.

சந்திரனுக்கு மற்றொரு பெயர் மதி. அந்த மதியின் வழியாகத்தான் உங்கள் விதியும் கதியும் நிர்ணயிக்கப்படுகின்றன. அந்த சந்திரன்தான் உங்கள் இராசிநாதன் என்பதால் நிலவு நிறைந்த நாளில் செய்கின்ற வழிபாடுகளும் திங்கட்கிழமையன்று செய்யும் சிறப்பு வழிபாடுகளும் உடனடியாக நற்பலன்களைக் கொடுக்கும். கிரகங்கள் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது மட்டும் எதையும் யோசித்துச் செய்வது நல்லது. கூட்டு முயற்சிகளில் இருந்தவர்கள் விலகுவர். எனவே, சுயஜாதகத்தில் தெசா புத்தியின் பலமறிந்து யோகம் தரும் கிரகத்திற்குரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொண்டால், சிந்திக்காது செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும்.

வருடத் தொடக்கத்தில் ஒன்பதாம் இடத்தில் குருவும் செவ்வாயும் இணைந்து குரு மங்கல யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே, குடும்பத்தில் மங்கல ஓசைகள் கேட்பதற்கான வாய்ப்புகள் மற்றும் மழலையின் ஓசைகள் கேட்பதற்கான வாய்ப்புகளும் உருவாகலாம். பன்னிரண்டாம் இடத்து கேது பயணங்களை அதிகரிக்கச் செய்யும்.

**கட்டளையிட்டதும் செய்யக் காத்திருப்பவர்கள் பலர்!**

நவக்கிரகங்களில் மாதாகாரகன் என்று வர்ணிக்கப்படுபவர் சந்திரன். அந்த சந்திரன் சொந்த வீட்டின் ஆட்சியில் உச்சத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் தாய்ப்பாசம் அதிகமாகவே இருக்கும். அதேநேரம் உங்கள் இராசிக்கு சுக்கிரன் பாவியாக விளங்குவதால், குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக இருக்குமா? என்பது சந்தேகம்தான்.

குடும்ப ஸ்தானாதிபதியாக சூரியன் அமைவதால், சூரிய, சந்திர பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொண்டால் முன்னேற்றம் வரும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள இயலும்.

உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை எப்பாடுபட்டாவது செய்து முடித்துவிடுவீர்கள். பொல்லாதவர்களையும் பழகி வைத்திருப்பீர்கள். நல்லவர்களையும் பழகி வைத்திருப்பீர்கள். எனவே, பொதுவாழ்வில் தலைமைப் பொறுப்புக்குத் தகுதியானவர்கள் என்று மக்கள் சொல்வர். "தோன்றிற் புகழோடு தோன்றுக!" என்ற வள்ளுவரின் வாக்கு, உங்களுக்கு முழுமையாகப் பொருந்தும்.

**பதவியில் மாற்றம் தரும் பத்தாமிடத்துக் குரு!**

குருப்பெயர்ச்சி வந்துவிட்டால், குதூகலமான வாழ்க்கை வருமென்று சொல்வார்கள்.ஆனால், அந்த குரு பத்தாமிடத்திற்கு வரும்பொழுது மட்டும் பயப்படுவார்கள். காரணம், பத்தில் குரு வந்தால், பதவியில் மாற்றம் வரும் என்பது பழமொழி. ஆனால், அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

பதவி இருந்தால்தானே மாற்றம் வரும். பதவி இல்லாதவர்களுக்கும் உத்தியோகம் அமையாதவர்களுக்கும் எப்படி இருக்கும் என்று ஒரு சிலர் கேட்பார்கள். அவர்களுக்கெல்லாம் புதிய பொறுப்புகளும் பதவிகளும் திடீரென ஏற்படும். ஆனால், திருப்திகரமாக இருக்காது. எனவே, குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே உங்களுக்கு யோகம் தரும் நாட்களைத் தேர்ந்தெடுத்து, சிறப்பு வழிபாடுகளைச் செய்வது நல்லது.

வேலைப் பளுமிக்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேறு வேலைக்கு ஏற்பாடு செய்த முயற்சி கைகூடும்.

*"பத்தினில் குருவும் வந்தால்,*
*பதவிதான் மாறும் என்பார்!*
*அத்தகு நிலையில் கூட,*
*அனுகூலம் கிடைப்பதற்கும்,*
*சொத்துகள் சேர்வதற்கும்,*
*சுகமெல்லாம் கூடுவதற்கும்,*
*தக்கதோர் குருவை நீங்கள்,*
*தரிசித்தால் வளர்ச்சி கிட்டும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவதால், குடும்பத்தில் ஒற்றுமை கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். வீடுகட்ட அல்லது வாங்க எண்ணிய எண்ணம் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். உத்தியோகம், தொழிலில் வரும் மாற்றங்களை சுய ஜாதகத்தின் பலமறிந்து தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

மே மாதம் 16அம் திகதி விருச்சிக இராசியில் இராகுவும் இடப இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள்.

இதுவரை பன்னிரெண்டாம் இடத்தில் சஞ்சரித்த கேது, இனி பதினோராமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். ஆறாமிடத்தில் சஞ்சரித்து வந்த இராகு இனி 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, இராகு- கேதுக்களின் ஆதிக்கம் அதிகம் இருக்கிறது.

புத்திர ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால், பிள்ளைகள் வழியில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். தல யாத்திரைகள் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரவேண்டிய தொகை வந்துசேரும். பழைய சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

அதேநேரத்தில் இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால், வரும் இலாபத்தை அசையாத சொத்துக்களாகவோ அல்லது பொருட்களாகவோ மாற்றி வைத்துக்கொண்டால்தான் அது நிலைக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் தீர மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். முட்டுக்கட்டையாக இருந்த மூத்த சகோதரர் இனி உங்கள் குணமறிந்து செயற்படுவார். இராகு- கேதுகளுக்கு ப்ரீதி செய்வது நல்லது

**அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம்!**

இதுவரை 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் 21.12.2011 அன்று 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். வெரிய கிரகங்கள் பெயர்ச்சியாவதற்கு ஆறு மாதங்கள் முன்னதாகவே பலன்களைக் கொடுக்கத் தொடங்கிவிடும்.

ஆயினும் தற்சமயம் சனி 4ஆம் இடத்தில் அல்லவா சஞ்சரிக்கப்போகிறார். எனவே எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்வதே நல்லது. களத்திர ஸ்தானத்திற்கும் 8ஆம் இடத்திற்கும் சனி அதிபதியாக வருவதால், குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்வதும், அதைச் சமாளிப்பதும் உங்கள் புத்திசாலித்தனமாகும். வீடு மாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் ஆகியவைகள் தானாகவே வந்துசேரும். வீட்டில் கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் போன்றவற்றை வைப்பது நல்லது.

பொதுவாகவே, இதுபோன்ற சனியின் ஆதிக்கம் ஏற்படும் நேரங்களில் முறையாக சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு, ஆதியந்த பிரபுவையும் வழிபடுவது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

வருடத் தொடக்கத்திலேயே சனி வக்ரமடைகிறார். மீண்டும் தைமாதம் வக்ரம் பெறுகிறார். அதன்பின்னர் வருடக் கடைசியில் பங்குனி 13ஆம் திகதி முதல் கன்னி இராசிக்கு வக்ரமாகிச் செல்கிறார். இதுபோன்ற வக்ர காலங்களில் நீங்கள் எந்தவொரு புது முயற்சிகளைச் செய்தாலும் அதில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டவேண்டும். 7, 8இற்கு அதிபதியாக சனி விளங்குவதால், வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் உருவாகலாம். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வேலை வாய்ப்பிலும் வி.ஆர்.எஸ் கொடுக்கும் எண்ணம் மேலோங்கும். சந்தோஷம் தரும் சனி கவசத்தை நாள் ஒன்றுக்கு எட்டுமுறை காக வாகனத்தான் சந்நிதியில் பாடுங்கள், கவலைகள் தீரும்.

குருவின் வக்ர காலம் 31.08.2011 முதல் 15.12.2011 வரை. இக்காலத்தில் வீண் விரயங்கள் கூடும். விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை. நண்பர்களை நம்பிச் செய்த காரியம் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். முறையான குரு வழிபாடு முன்னேற்றம் வழங்கும். *(தொடரும்)*

# நுகர்வோர் சட்டங்களை மீறிய வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

இம்மாதம் முதலாம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் நுகர்வோர் சட்டங்களை மீறிய சுமார் ஆயிரத்து 400 வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டதாக நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை தெரிவிக்கின்றது.

நிர்ணய விலையை விடக் கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பில் 700 வர்த்தக நிலையங்களை சுற்றி வளைத்ததாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஸூக் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர காலாவதியான பொருட்கள் விற்பனை தொடர்பாக 300 வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாத சுமார் 400 வர்த்தக நிலையங்களிலும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் பிரதான நகரங்கள் பலவற்றை உள்ளடக்கியதாக விசேட திடீர் சோதனைக் குழுக்களைக் ஈடுபடுத்தியுள்ளதாக ரூமி மர்ஸூக் தெரிவித்தார்.

அடுத்த சில வாரங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து விஸ்தரிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

# கிளிநொச்சி மாவட்டத்தில் தபால் நிலையங்கள் புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று பிரதான தபால் நிலையங்கள் மீள் கட்டுமானத் திட்டத்தின் மூலம் புதிதாகப் புனரமைக்கப்படுகின்றன. பளை, பரந்தன், கிளிநொச்சி ஆகிய தபால் நிலையங்கள் நடைபெற்ற போரின்போது முற்றாக அழிவடைந்துவிட்டன.

இதனையடுத்து இந்தத் தபால் நிலையங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி கிளிநொச்சி தபால் நிலையத்தின் அழிவுகளை அப்புறப்படுத்தி புதிய கட்டட நிர்மாணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

பளை தபால் நிலையத்தின் அழிவுகள் அகற்றப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பரந்தன் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் கட்டத்தை எட்டியுள்ளன. (ஶ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு ஶ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய முன்றலில் தலைவர் ச.வசந்தரூபன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# புலிகளின் இறுதிக் கதறலை கைவிட்டாரா கருணாநிதி

பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளில் வெளியாகும் 'ஈழமுரசு' பத்திரிகையில், ஈழப்போரின் கடைசிக்கட்டம் பற்றி அதிர்ச்சித் தகவல்கள் இந்த வாரம் வெளியாகியுள்ளன!

ஈழமுரசு லீக்ஸ் என்ற பெயரில் "தந்திரிகளின் மறுமுகம்" என்று ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. முதல்வர் கருணாநிதியும் அவரது மகள் கனிமொழியையும் கடுமையாக விமர்சிக்கின்றது அந்தக் கட்டுரை. "ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் நூற்றுக்கணக்காக அப்பாவிமக்கள் செத்துக்கொண்டிருக்க அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென கடைசியில் போர்நிறுத்த முயற்சியில் புலிகள் இறங்கினர். இதற்காக மத்திய அரசை வலியுறுத்துவதற்காக, தங்கள் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன் மூலமாகக் கருணாநிதிக்கும் தி.மு.க-வின் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழிக்கும் கடிதங்கள் அனுப்பினார். இந்தக் கடிதங்களுக்கு கருணாநிதி உரியபடி எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை. நடேசனுக்கு தாமதமாக கனிமொழி ஒரு கடிதம் அனுப்பினார். அதில் 'டில்லி சொற்படி ஆயுதங்களைக் கீழே போடுங்கள்' என்று கூறியுள்ளார். கருணாநிதிக்கும் புலிகளுக்கும் இடையிலான கடிதப் பரிமாற்றத்தில் பாதிரியார் ஜெகத்கஸ்பாரும் பேராசிரியர் சு.ப. வீரபாண்டியனும் தொடர்பாளர்களாகச் செயற்பட்டனர்! என்று. அக்கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

"தி.மு.க-வுக்கும் புலிகளுக்கும் நீண்ட இடைவெளி தொடர்ந்தும், இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் காப்பாற்றவே கருணாநிதியுடன் புலிகள் இணக்கம் பேணினார்கள். 2008, ஒக்டோபரில், இலங்கையில் போர் நிறுத்தம்கோரி கருணாநிதி கருத்து வெளியிட்டார். 'போர் நிறுத்தம் காணாவிட்டால் 14 நாட்களுக்குள் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவார்கள்' என அறிவித்தார். இதற்கு மகிழ்ச்சி தெரிவித்து, கருணாநிதியின் மின்னஞ்சல் முகவரிக்கும் சு.ப. வீரபாண்டியன் மூலமாகவும் நேரடியாகவும் நடேசன் கடிதம் அனுப்பினார்" என்றும் குறிப்பிட்டுள்ளது ஈழமுரசு.

மேலும் அது வெளியிட்டுள்ள அதிர்ச்சித் தகவல்கள் இவைதான்...

2008 ஒக்டோபர் 15ஆம் திகதி, இலங்கைப் போர்நிறுத்தத்திற்காக முதல் ஆளாக பதவி விலகுவதாக கனிமொழி தன் தந்தையிடம் விலகல் கடிதம் அளித்தார். அதையொட்டி, கனிமொழிக்கு நேரடியாகவும் சு.ப. வீரபாண்டியன் மூலமாகவும் நடேசன் வாழ்த்துச் செய்தி அனுப்பினார். அதில், "சகோதரிக்கு, ஈழத்தமிழ் மக்களின் துயர் துடைக்கும் நோக்குடன் உங்கள் ராஜ்சபா அங்கத்தினர் பதவி துறந்து முன்மாதிரியாக நடந்து கொண்டமை முழுத்தமிழ் மக்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. எமது இயக்கத்தின் நன்றியினையும் மக்களின் நன்றியினையும் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன்!" என நடேசன் கூறியுள்ளார்.

ஆனால், இரண்டு வாரங்களுக்குள் கனிமொழி விலகல் கடிதத்தைத் திருப்பப் பெற்றுக் கொண்டார். போர் நிறுத்தம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஒக்டோபர் 31 அன்று தமிழீழ தேசிய போரெழுச்சிக் குழுவின் செயலாளர் சே. முகுந்தன், சு.ப வீரபாண்டியன் மூலமாக கருணாநிதிக்கு மனு அனுப்பினார். இதற்கும் எந்தப் பலனும் இல்லை! டிசம்பர் 2 ஆம் திகதி வன்னியில் இருந்து தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் க. ஆதித்தன், கருணாநிதிக்கு இன்னொரு கடிதம் அனுப்பினார். இதன் நகலை மீண்டும் டிசம்பரில்7 இல் கருணாநிதியின் மின் னஞ்சல் முகவரிருக்கு நடேசன் அனுப் பினார்.

இருந்தாலும் கருணாநிதியின் மனம் நெகிழவேயில்லை. 02.01.2009 அன்று கிளிநொச்சியை சிங்களப் படைகள் ஆக்கிரமித்தது. கிளிநொச்சி வீழ்ந்தவுடன், புலிகளை ஆயுதங்களைக் கீழே போடுமாறு சிதம்பரம் உட்பட்ட மத்திய அமைச்சர்கள் வலியுறுத்தினர். அந்த நேரத்தில் 12.02.2009 இல் நடேசனுக்கு ஜெகத்கஸ்பரால் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதில், 'அன்புள்ள திரு நடேசன், தொடர்பு விபரங்களை உள்ளடக்கிய மடல் எமது நேரம் பிற்பகல் 4.45க்கு அவர்களால்(இந்திய அரசால்) அனுப்பப்பட்டு உள்ளது. தயவு செய்து உறுதிப்படுத்தவும்- ஜெகத்' என இருந்தது. "ஈழத்தமிழர்களுக்கு கௌரவமான போர்நிறுத்தத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழகஅரசுக்கு அழுத் தம் கொடுக்கும் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிடவில்லை. இதனைத் தொடர்ந்து தன்னுடன் நடேசன் நேரடித் தொடர்புகளை பேணுவதற்கு வசதியாக, 02.03.2009 அன்று மின்னஞ்சல் ஒன்றை கனிமொழி அனுப்பினார். ஆனந்தபுரம் போர் தொடங்க சில மணிக்கு முன்னர் 29.03. 2009 அன்று காலையும், மதியமும் கனிமொழிக்கும் கருணாநிதிக்கும் நடேசன் அவசரச் செய்தி ஒன்றை அனுப்பினார். இதைத்தன்னால் வாசிக்க முடியவில்லை என்று கனிமொழி பதில் அனுப்பியதால், மீண்டும் அதே செய்தியை மறுநாள் காலை கனிமொழிக்கு நடேசன் அனுப்பினார். அதன் விபரம்...

'அன்பான சகோதரி கனிமொழிக்கு, இங்கு தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வருகின்றனர். எமது அவலங்களைப் போக்கவே யுத்தநிறுத்தத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றோம். ஆனால் சிங்கள அரசு, யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துகிறது. சிங்கள அரசின் அதிமுக்கிய மூத்த அமைச்சர்கள் எல்லாம் இந்திய அரசின் உதவியால்தான் யுத்தத்தை வென்று கொண்டிருக்கிறோம் என பகிரங்கமாக அறிவித்தவண்ணம் உள்ளனர். இந்த நேரத்திலாவது நீங்களும் அப்பாவும் இந்திய அரசை வலியுறுத்தி, யுத்தநிறுத்தத்தைக் கொண்டு வந்தால் எமது மக்களைக் காப்பாற்றலாம். நிபந்தனையற்ற யுத்தநிறுத்தமே எதிர்காலத்தில் அரசியல் பேச்சுவார்த்தைக்கும் நிரந்தரசமாதானத்திற்கும் வழிவகுக்கும். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தபணியைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்...அன்பான சகோதரன் பா.நடேசன்' என்று நடேசன் குறிப்பிட்டுள்ளார்.



ஜெகத் கஸ்பர் கனிமொழி சுப.வீரபாண்டியன் நடேசன்

## அன்பின் சகோதரி கனிமொழி... அப்பாவிடம் சொல்லுங்கள்... —நடேசன்—



மிகவும் நெருக்கடியான நேரத்தில் அனுப்பிய இக்கடிதத்துக்கு கருணாநிதியோ கனிமொழியோ உடனடியாகப் பதில் அனுப்பவில்லை. புலிகளின் பகுதி சுருங்கிய நிலையில், ஒரு வார இடைவெளிக்குப் பின்னர் 07.04.2011இல் கனிமொழி பதில் அனுப்பினார். அதில், நடேசன் அண்ணன், நிலைமை மிகவும் மோசமாக இருப்பதை நான் அறிவேன். நீங்கள் அனுப்பிய மடல் தொடர்பாக சம்பந்தப்பட்ட எல்லோருடனும் பேசிவிட்டேன். குடியரசுத் தலைவரின் உரை

**ஜூனியர் விகடன்**

யில் தெரிவிக்கப்பட்டமை போன்று 'ஆயுதங்களை கீழேபோடுவதற்கான ஒப்புதலை நீங்கள் வெளியிடவேண்டும்' என்று அரசாங்கம் எதிர்பார்ப்பதால், தயவு செய்து அதைச் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் இந்திய அரசாங்கம் உதவக்கூடும் போல் தோன்றுகிறது. நான் சொல்வதை செய்யமுடியாவிட்டால், தயவு செய்து டில்லியுடனேயே பேசுங்கள்.

(15ஆம் பக்கம் பார்க்கவும்)

# புகழ் பெற்ற வில்லன் நடிகர் ராமி ரெட்டி காலமானார்



(சென்னை)

தெலுங்கு மற்றும் இந்தி திரைப்படங்களில் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்து புகழ் பெற்ற நடிகர் ராமி ரெட்டி ஹைதராபாதில் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 52.

கடந்த சில வாரங்களாக சிறுநீரக கோளாறு காரணமாக சிகிச்சை பெற்று வந்த ராமி ரெட்டி செகந்திராபாதில் உள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மரணமடைந்தார். அவருக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர்.

அங்குசம் படத்தில் ராமி ரெட்டியின் கதாபாத்திரம் மிகவும் பிரபலமடைந்தது. தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, மலையாளம் மற்றும் போஜ்புரி மொழிகளில் 250 இற்கும் மேற்பட்ட படங்களில் அவர் நடித்துள்ளார்.

ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராமி ரெட்டி திரையுலகில் நுழைவதற்கு முன்பு பத்திரிகையாளராக தனது பணியைத் தொடங்கினார்.

ராமி ரெட்டியின் திடீர் மறைவு திரையுலக துறைக்கு பெரிய இழப்பு. அவர் ஒரு சிறந்த நடிகர் என நகைச்சுவை நடிகர் பிரம்மானந்தம் தெரிவித்தார். (ச-5)

# நடிகர் ரஜினி யாருக்கு வாக்களித்தார்? இரகசியம் அம்பலம்; கலைஞர் அதிருப்தி

(சென்னை)

தேர்தலில் வாக்களிப்பது ஒரு குடிமகனின் அடிப்படை உரிமை. யாருக்கு வேண்டுமானாலும் அவர்கள் வாக்களிக்கலாம். ஆனால் அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்ற இரகசியம் காக்கப்பட வேண்டும் என்பது கட்டாயம்.

நடிகர் ரஜினிகாந்த் கடந்த புதன்கிழமை வாக்களித்த போது எந்த கட்சிக்கு வாக்களித்தார் என்ற இரகசியம் அம்பலமாகிவிட்டது. பொதுவாக அவர் வாக்களிக்க வரும் போது ரசிகர்களை மிஞ்சும் அளவுக்கு ஊடகவியலாளர்கள் மொய்த்துக் கொள்வார்கள். கடந்த புதன்கிழமையும் அப்படித்தான் நடந்தது.

அவர் வாக்களிக்கும் இடத்துக்குச் சென்ற போதும் கமராக்கள் துரத்தின. அவர்களை அப்புறப்படுத்த ரஜினியும் முயற்சிக்கவில்லை.

அவருடன் வந்திருந்தவர்களும் முயற்சிக்கவில்லை. இதனால் அவர் எந்த கட்சிக்கு வாக்களித்தார் என்பதை அப்படியே தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துள்ளனர்.

இந்த விடயம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது போதாதென்று மக்கள் கடுமையான விலைவாசியால் அவதிப்படுகிறார்கள். நல்ல ஆட்சியை எதிர்பார்கின்றார்கள். அவர்களுக்கு நல்ல மாற்றம் கிடைக்கும் என்று அதிரடியாக பேட்டியும் அளித்து பரபரப்பூட்டினார்.



இந்த நிலையில் அன்று மாலையே தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் பொன்னர் சங்கர் பார்க்க வேண்டிய சூழல்.

காலையில் ஏற்பட்ட பரபரப்பினால் ரஜினி வருவாரா மாட்டாரா என்று எல்லோரும் காத்திருந்தார்கள். ஒரு வழியாக வந்தார். ஆனால் முதல்வருடன் அவரால் சகஜமாக இருக்க முடியவில்லை என்றார்கள்.

படம் பார்த்துக் கொண்டிருக்கும் போது கவிஞர் வைரமுத்துவின் மூலமாக தனது கோபத்தை சிரித்துக் கொண்டே வெளிப்படுத்தினாராம் தி.மு.க. தலைவர் கருணாநிதி. (ச-5)

# தனிப்பெரும்பான்மையுடன் அ.தி.மு.க.ஆட்சியமைக்கும்

## புதிய தமிழகம் கிருஷ்ணசாமி தெரிவிப்பு

(தூத்துக்குடி)

தமிழகத்தில் தனிப்பெரும்பான்மையுடன் அ.தி.மு.க ஆட்சியமைக்குமென புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்று முன்தினம் அவர் கூறியதாவது,

சட்டசபை பொதுத் தேர்தலில் பண பலம், அதிகாரபலம், அரசு துஷ்பிரயோகம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டதற்காக தேர்தல் ஆணையகத்தை பாராட்ட வேண்டும்.

இவற்றையும் மீறி வாக்காளர்களுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஐந்து ஆண்டு கால தி.மு.க.வின் குடும்ப ஆட்சி, விலைவாசி உயர்வு, தொடர் மின்வெட்டு, மத்திய மற்றும் தமிழக அரசுகளின் ஊழல் ஆகியவற்றிக்கு எதிராக மக்கள் வாக்களித்துள்ளனர். இதனால்தான் 75 முதல் 80 சதவீதம் வரை வாக்குகள் பதிவாகியுள்ளன.


புதிய தமிழகம் போட்டியிட்ட நிலக்கோட்டை, ஒட்டப்பிடாரம் (தனி) ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றி பெறும்.

தமிழகத்தில் தனிப் பெரும்பான்மையுடன் அ.தி.மு.க ஆட்சியமைக்கும்.

இலவசங்களுக்காக பெண்கள் அதிகளவில் வாக்களிக்கவில்லை. மாறாக விலைவாசி உயர்வு, குடிநீர் பிரச்சினை உள்ளிட்டவற்றை எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

நான் வெற்றி பெற்றால் தென் மாவட்டத்தில் சாதி மோதல் ஏற்படுமென்பது தி.மு.க.வின் பொய்ப்பிரசாரம். தொழில் வளம் பெருகவும் சமூக நல்லிணக்கம் ஏற்படவுமே நான் அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்தேன் என்றார். (ஸ்ரீ-2)

# ஊழல் குறித்து விசாரிக்க அனைத்து கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும்



## அத்வானி தெரிவிப்பு

(சென்னை)

ஊழல் செய்யும் அதிகாரிகள் , அரசியல்வாதிகளை தண்டிக்க மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்தும் லோக்பால் சட்டத்தை அமுல்படுத்தக்கோரி காந்தியவாதி அன்னா ஹசாரே உண்ணாவிரதம் இருந்தார். அதைத் தொடர்ந்து லோக்பால் சட்ட விதிகளை உருவாக்க கூட்டுக்குழு அமைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும் மழைக்கால கூட்டத் தொடரின் போது பாராளுமன்றத்தில் லோக்பால் சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் உறுதி அளித்துள்ளது. இதற்கு பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி ஆதரவு தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக இணையத்தள பக்கத்தில் எழுதியுள்ள கட்டுரையில்,

ஊழல், கறுப்புப்பணம் மற்றும் தேர்தலில் பண ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவது குறித்து சட்டம் இயற்ற அனைத்து கட்சிக் கூட்டம் கூட்டி ஆலோசனை நடத்த வேண்டும் என தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புலிகளின் இறுதிக்...

*(14ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மக்களைப்பற்றி உள்துறை அமைச்சரும் அக்கறையாக உள்ளார். கிடைக்கும் செய்திகள் கவலை அளிக்கின்றன.

தயவுசெய்து அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். தவறான வழிகாட்டல்களை பின்பற்றாதீர்கள் என இருந்தது.

கனிமொழியின் இந்தக் கடிதத்திற்கான எதிர்ப்பை புலிகள் நாசூக்காகத் தெரிவித்தனர். இந்நிலையில் அன்று பிற்பகல் புலிகளின் ஆயுதங்களை கைவிட வலியுறுத்தி கனிமொழியால் இன்னொரு கடிதம் அனுப்பப்பட்டது. 'நடேசன் அண்ணன் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக எல்லோரும் கவலையில் உள்ளோம்.

இலங்கை அரசு பேச் சுவார்த்தைகளில் ஈடுபட முன்வரும் பட்சத்தில் ஆயுதப்போராட்டத்தை கைவிட தயாராக இருப்பதாக அறிவிப்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

உள்துறை அமைச்சரும் முதலமைச்சரும் அங்குள்ள மக்கள் தொடர்பாக மிகவும் அக்கறையாகவுள்ளார்கள். நான் சொல்வதை செய்யமுடியாவிட்டால் தயவு செய்து டில்லியில் உள்ளவர்களோடு பேசவும்.' என்று இருந்தது.

போரை நிறுத்த முயலுமாறு புலிகள் வலியுறுத்தியபோது, ஆயுதங்களைக் கைவிட கனிமொழி சொன்னது ஒரு புறம்இருக்க... நடேசனுக்கு அனுப்பிய கடிதங்களின் நகல்கள் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அப்போதைய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன.

இந்திய நாடாளுமன்றத்திற்கான நாள் நெருங்கத்தொடங்க, தமிழகத்தில் மீண்டும் மக்களின் கொந்தளிப்பு. அதை தணிக்கும் நோக்கில் 27.04.2009 அன்று சென்னையில் கருணாநிதியால் உண்ணாவிரதம் அரங்கேறியது.

காலை தொடங்கிய கருணாநிதி 'தனது முயற்சியால் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட்டது' என்று மதியத்துக்குள் பழசரம் அருந்தி முடித்துக் கொண்டார்.

ஆனால், அதே நாளில் வன்னியில் நூற்றுக்கணக்கான தமிழ் உயிர்களைச் சிங்களம் நரபலி வேட்டையாடியது.

கருணாநிதியை நம்பியிருந்த வன்னி மக்களுக்கு சாவதைத்தான் பரிசாக வழங்கினார் கருணாநிதி.

ஈழத்தமிழினமே பலிக்கடா ஆனது! இவ்வாறு கடுமையான விமர்சனத்தோடு முடிந்திருக்கிறது அந்தக் கட்டுரை. அந்தத் தகவல்கள் உண்மைதானா என்பது பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் பேசினோம்.

பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன், "ஈழமக்களின் போராட்டத்திற்கு உதவியாகத் தமிழக அரசிடம் அவ்வப்போது நான் தொடர்புகொண்டிருந்தேன். தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் கலைஞர் செய்தார். இது தான் அடிப்படை உண்மை.

தேர்தல் சுற்றுப்பயணத்தில் இருப்பதால் திகதி வாரியாக கடிதவிபரங்களைச் சொல்ல முடியாது" என்று முடித்துக்கொண்டார்.

பாதிரியார் ஜெகத் கஸ்பரிடம் கேட்டபோது "ஈழப்போரின் கடைசிக் கட்டத்தில் 2009 ஜனவரி, பெப்ரவரியில் இந்திய அரசின் சார்பில் போர் நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அதில், போர்நிறுத்த வரைவைத் தயாரித்ததும் புலிகளுக்கும் இந்திய அரசுக்குமான தொடர்பாளராக இருந்ததும் தான் என் பணி. உணர்வாளர்கள் எனச் சொல்லிக்கொள்ளும் பலர் இந்த முயற்சி வெற்றி பெறக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள்! அதன் பின்னர் ஏப்ரல், மே மாதங்களில் புலிகளின் சார்பில் போரை நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டனர். அதில் எனக்கு எந்தத் தொடர்புமில்லை" என்றார்.

தி.மு.க எம்.பி, கனிமொழியிடம் கேட்டபோது, இந்த விபரம் தொடர்பாக உங்களுக்கு நான் கருத்து சொல்லவிரும்பவில்லை! என்பதோடு முடித்துக்கொண்டார். "போரை நிறுத்தச் சொல்லுங்கள்" என்று ஈழமக்கள் கதற... "ஆயுதங்களை கீழே போடுங்கள்" என்று இவர்கள் சொல்ல ஒன்றரை இலட்சம் தமிழர்கள் பலியானது நடந்தது. சம்பந்தப்பட்டவர்களுக்கு மனச்சாட்சி இருந்தால் குற்றவுணர்வு ஏற்படும்!

# கடந்த வருடத்தில் சிறிலங்கன் விமானசேவை நிறுவனத்துக்கு செயற்பாட்டு நஷ்டம்

(கொழும்பு)

சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் கடந்த வருடம் செயற்பாட்டு நஷ்டம் அடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எனினும் 2009 ஆம் ஆண்டு நிறுவனம் அடைந்த நஷ்டத்தை விட 2010 ஆம் ஆண்டு அடைந்த நஷ்டம் 49 வீதத் தால் குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சிறிலங்கன் விமான சேவையின் விமானங்களில் பயணித்த பயணிகளின் எண்ணிக்கை 24.5 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கிதெரிவித்துள்ளது.

இதேவேளை பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இருந்து கடந்த வருடம் அதிகளவிலான சரக்கு விமானங்கள் புறப்பட்டுச் சென்றுள்ளன.

இவைகளின் மூலம் கடந்த ஆண்டு 26 ஆயிரத்து 445 மெட்ரிக் தொன் சரக்குகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

(ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

20 வருட அனுபவம்

**Course Length - Six Month**

**APRIL. 2011 TO SEPT.2011**

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: **0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011**


# மனம் கனிந்த பாராட்டுக்கள்

## திரு.நாகலிங்கம் தனேந்திரன்



யாழ்.நகர் கொட்டடி சீனிவாசகம் வீதியை பிரதிபலிப்பவரும், வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாளின் தொண்டரும், சமாதான நீதிவானும் சமய சமூகப் பொதுப் பணி தொண்டரும், பொதுச்சங்கங்கள் பலவற்றின் தலைமைப் பதவியை ஏற்றிருப்பவரும், வில்லூன்றி இந்து மயான, யாழ். பிரதேச செயலக கிராம மாதர் அபிவிருத்தி சங்கங்களின் சமாசத் தலைவரும், எமது ஆலயத்தின் உப செயலாளரும், சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ். நகர உறுப்பினரும், வேலணை மக்கள் இடம்பெயர்ந்திருந்த வேளையினில் பெருங்குளம் முத்துமாரி அம்பாளின் ரதோற்சவ தினத்தில் அடியவர்களின் பங்களிப்புடன் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் விசேட உற்சவம் நடாத்தி அம்பாள் அடியவர்கள் மனம் குளிர வைத்தது மட்டுமன்றி, மக்கள் மீள்குடியேறிய போது மூடப்பட்டிருந்த ஆலயத்தை உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு மக்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் திறந்து நித்திய பூசைகள் இடம்பெற வழிசமைத்தது மட்டுமன்றி இன்று இருக்கும் நிர்வாக சபையுடன் இணைந்து இலை மறைகாய் போல் பல சேவைகளை ஆற்றிவருபவருமாகிய

**திரு.நாகலிங்கம் தனேந்திரன் அவர்கட்கு சிறப்பு விருதாம் "கலாநிதி"**

எனும் கௌரவம் வழங்கப்பட்டமையை இட்டு நாம் அனைவரும் பெருமை அடைவதுடன் அவர் சேவை மேலும் தொடர எல்லாம் வல்ல பெருங்குளத் தாயின் பாதம் வணங்கி வாழ்த்துகின்றோம்.

**வேலணை பெருங்குளம்**
**முத்துமாரி அம்மன் ஆலய**
**பரிபாலன சபையினர்.**

(4496)

## காலத்தின் தேவையில்

# மாபெரும் கண்காட்சி

**மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்**

## கண்காட்சி நிகழ்வும் கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும்

**இடம் : யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.**
**காலம்: 20.04.2011 புதன்கிழமை, 21.04.2011 வியாழக்கிழமை**
**நேரம் : காலை மு.ப 10.00 மணி தொடக்கம்- பி.ப 5.00 மணிவரை**

## நிகழ்ச்சிகள்

- பிராந்திய மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகச் செயற்பாடுகளும் விளக்கங்களும்
- இராணுவ பொறியியல் படைப்பிரிவு , **Halo Trust, Danish Deming Group** ஆகியோரின் உலகத் தரம் வாய்ந்த கண்ணிவெடி அகற்றுதலுக்கான செயன்முறை விளக்கங்களும், பயன்படுத்தப்படும் எந்திரப் பொறிகளின் வகைகளும் காண்பிக்கப்படவுள்ளன.
- இராணுவப் பொறியியற் பிரிவினரின் பல்வேறு மிதிவெடிகள், வெடிபொருட்களின் வகைகளை மக்கள் விழிப்புணர்வுக்காகக் காட்சிப்படுத்த உள்ளனர்.
- மிதிவெடி விழிப்புணர்வு நிறுவனங்களின் பல்வேறு அரிய காட்சிப்படுத்தல்களும் இடம்பெற உள்ளன.

(சி-2983)

**கண்ணிவெடிகள்/ வெடிபொருட்களின் அரக்கப்பிடியில் இருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இன்றும் விபத்துக்கள் தொடர்கின்றன...**

**அனைவரையும் அணிதிரண்டு வந்து கண்காட்சியைக் கண்டு பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.**

**மிதிவெடி/வெடி பொருட்களின் ஆபத்தில் இருந்து எம்மையும் மற்றவரையும் பாதுகாப்போம்.**

**அனுமதி இலவசம்**

**விழா ஏற்பாட்டாளர்கள்: பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், வடக்கு.**

இறைவனை நோக்கிச் செல்லுங்கள். ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் நல்ல சாலையைக் காண லாம். - ரஷ்ய பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மானிப்பாய் மருதடியானுக்கு மன்றாட்டமான ஒரு மகஜர்!

விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு ஆறு மாதங்கள் விண்ணில் சஞ்சரித்து நாடு திரும்பிய சுனித்தா வில்லியம்ஸ் என்ற பெண்மணி தனது பயணம் பற்றி கருத்து தெரிவிக்கையில், விண் வெளிப்பயணத்தின் போது தன்னுடன் சிறிய பிள்ளையார் சிலையையும் பகவத் கீதையை யும் எடுத்துச் சென்றதாகக் கூறியதுடன், பிள் ளையார் அறிவின்–ஞானத்தின் தத்துவப் பொருள் என்று கூறியுள்ளார்.

இந்தியப் பரம்பரையை–அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ பெண்மணியான சுனித்தா வில்லியம்ஸ் பிள்ளையாரின் பெருமைகளை அறிந்து வைத்துள்ள அளவில், ‘பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்’ என்று பாடிப்பரவிய நாம் பிள்ளையாரின் பெரு மைகளை மறந்து விட்டோம்.

இதற்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆல யம் நல்லதோர் உதாரணம்.

இன்றைக்கு எட்டு ஆண்டுகளைக் கடந்து அந்த ஆலயம் மகோற்சவத்தை இழந்து நிற்கிறது.

தமிழ் புத்தாண்டில் மானிப்பாய் மருதடி யானுக்குத் தேர்த்திருவிழா இடம்பெறும். புத்தாண் டில் மருதடியானை வழிபட்டு தங்கள் காரியங் களை ஆரம்பிக்கும் கலாசாரம் நீண்டகாலமாக நிலவி வருவதுண்டு.

யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் மருதடிக்கு வரும் பக்தர்கள் ஏராளம்.

புத்தாண்டில் தேர்வடம் பிடித்து விநாயகா... விநாயகா... என்று சிந்தையிருத்தித் தொழும் அருமந்த நடைமுறைக்கு குந்தகம் ஏற்பட்டுவிட்டது.

மருதடியானின் இருப்பிடம் முழுவதையும் தரைமட்டமாக்கி ஆலயத்தின் கீர்த்தியை குலைத்து விட்டதன் காரணமாக, அந்த ஆலயம் இன்ன மும் எழுகை பெறமுடியாமல் உள்ளது.

என்ன செய்வது? எங்களிடம் பழமையில் பெருமைகாணும் அறிவுடைமைக்கு ஏற்பட்ட பஞ் சமும் மானிப்பாயூர் சைவ மக்கள் மருதடி விநாய கர் ஆலயத்தில் மீண்டும் மகோற்சவம் நடத்த வேண்டும் என உரியவர்களுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறியதன் காரணமுமாக மானிப்பாய் ஊரின் கண் வீற்றிருந்த மருதடி விநாயகனின் மகிமை இழந்தாயிற்று.

இந் நிலைமை தொடருமாயின் வரலாற்றுப் பெருமை மிக்க மானிப்பாய் மருதடியானை மறந்துபோகும் துன்ப நிலை ஏற்பட்டுவிடும்.

ஆதலால் மருதடியானே! உனக்கு மன்றாட்ட மாக ஒரு மகஜரை கையளிக்கின்றோம்.

மீண்டும் மகோற்சவம் நடக்கவும் தமிழ் புத் தாண்டில் நீ தேர் ஏறி திருவீதி உலா வரவும் அந்த அற்புதக் காட்சியை கண்ணாரக் கண்டு களிக்க வும் விநாயகா சந்தர்ப்பம் தா?

நாம் செய்த தவறை மன்னித்து உன் கீர்த்தி மீண்டும் அந்த திருமண்ணில் பிரகாசம் பெற வேண்டும். அதற்கு நீயே துணை புரியவேண்டும்.

மருதடியானே! நீ நினைத்தால் மட்டுமே உன் திருத்தலம் மீண்டும் பொலிவு பெறமுடியும் என் பதை நிரூபித்து விட்டாய்.

ஆகையால் உன் கருணைக்கண் பார்வை யால் அடுத்த தமிழ் புத்தாண்டில் நீ தேர் ஏறி வந்து எங்கள் தீரா வினையறுத்து திருவருள் புரிக! மன்றாட்டமான எம் மகஜரை ஏற்றிடுக.

# வடபிராந்திய ஆட்டோ சங்கத்தின் செயற்பாடுகள் முடக்கம்

## ஆட்டோ சாரதிகள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு



யாழ்.நகரப் பகுதியில் ஆட்டோ சங் கத்தில் பதிவினை மேற்கொண்ட சாரதி கள் அனைவரும் நேற்றுக்காலை 8 மணி முதல் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் வடபிராந்திய ஆட்டோ சங்கத்தின் பணி கள் அனைத்தும் முடங்கின.

ஆட்டோ சங்கத்தில் பதிவினை மேற் கொண்ட ஆட்டோக்கள் தரிப்பிடப்பட வேண்டிய இடத்தில் வெளியிடங்களி லிருந்து வரும் ஆட்டோக்கள் தரிப்பிடுவ தால் தமது தொழிலில் பாதிப்பு ஏற்படுவ தாக கூறியே இவ்வாறு பணிப்பகிஷ்கரிப் பில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக வடபிராந்திய ஆட் டோ சங்கத்தின் தலைவர் மு.தர்மகுல ராஜா தெரிவிக்கையில், வெளியிடத்தி லிருந்து வந்து யாழ்.நகரப்பகுதியில் தொழிலில் ஈடுபடும் ஆட்டோக்களால் பயணிகளுக்கும் பல இடர்பாடுகள் ஏற் படுவதாக எமது சங்கத்தில் முறையிடப் பட்டுள்ளது.

மதுபோதையில் பயணிகளுடன் தவ றான முறையில் நடந்து கொள்வதால் ஒழுக்கமான முறையில் நடந்து கொள் ளும் எமது சாரதிகளுக்கும் பாதிப்பு ஏற் படுகிறது.

யாழ்.நகரப் பகுதியில் மூன்று ஆட்டோ தரிப்பிடங்கள் உள்ளது. அதில் வைத் தியசாலைக்கு முன்பாகவுள்ள தரிப்பிடத் தில் 72 ஆட்டோக்களும் பஸ் நிலையத் திற்கு முன்பாக உள்ள தரிப்பிடத்தில் 48 ஆட்டோக்களும் வைரவர் கோயிலுக்கு முன்பாகவுள்ள தரிப்பிடத்தில் 57 ஆட் டோக்களும் தரிப்பிடப்படுகின்றன.

இவ்வாறு பெருந்தொகையிலான ஆட்டோக்கள் தொழிலில் ஈடுபட்டிருக் கும் நிலையில் பதிவினை மேற்கொள் ளாத ஆட்டோக்களும் அவ்விடத்தில் தரித்து நின்று சேவையில் ஈடுபடுகிறது.

இதனால் தொழில் ரீதியில் இருதரப் பினர்க்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு வாக்குவாதங்கள் ஏற்படுகின் றன.

எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி நக ருக்குள் நுழையும் வெளியிடங்களி லிருந்து வரும் ஆட்டோக்களினால்பல வருடங்களாக தொழில் புரிந்தவர்கள் பாதிப்படைய வேண்டியுள்ளது.

அதுமட்டுமின்றி ஆட்டோக்களில் பயணிகளால் தவறவிடப்படும் பொதி கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படு வதில்லை.

எமது ஆட்டோ சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு சேவையில் ஈடுபடும் ஆட்டோக்களில் பயணிகளால் தவற விடப்படும் பொதிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கும் வழக்கம் சாரதிகளுக் குண்டு. ஆனால் பதிவினை மேற் கொள்ளாத ஆட்டோக்களில் தவறவிடப் படும் பொதிகள் தொடர்பாக எமக்கு மக்கள் முறைப்பாடு செய்யும் போது அதை எவ்வாறு நாம் பெற்றுக் கொடு க்க முடியும்.

ஒருசிலர் செய்யும் தவறுகளால் முறைப்படி நாணயமாக தொழிலில் ஈடுபடுபவர்களும் பாதிப்படைகின்றனர்.

எனவே, சங்கத்தில் பதிவினை மேற்கொள்ளாத வெளியிடங்களிலிரு ந்து வரும் ஆட்டோக்கள் யாழ்.நகரப் பகுதியில் குறித்த மூன்று தரிப்பிடங் களிலும் தரிப்பிட்டு தமது தொழிலை மேற்கொள்வதைக் கட்டுப்படுத்த வேண்டும்.


இது தொடர்பாக பொலிஸ், இராணு வம் மற்றும் பல அரச நிறுவனங்களி லும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை. அத்துடன் அதற்கு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தே நாம் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு ள்ளோம் என அவர் மேலும் தெரிவித் தார்.

இதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட சாரதிகள் தெரிவிக்கையில், முச்சக்கரவண்டி சங்கத்தில் பதிவினை மேற்கொள்ளாத சாரதிகள் தமது முச் சக்கரவண்டியில் பயணிகளை ஏற்றிச் செல்லும் போது, தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் ஏற்றிச் செல்கின்றனர். இதனால் பயணிகள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

காலகாலமாக இந்தப் பகுதியில் நாம் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். ஒருமுறைப்படியே நமது தொழில் நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. இதற்கிடையில் வெளியிடங்களி லிரு ந்து வரும் ஆட்டோக்களால் எம் தொழில் நடவடிக்கைகள் முடக்கப்படு கிறது என அவர்களால் தெரிவிக்கப் பட்டது.

மேலும் இந்த ஆட்டோ சாரதிகளின் பணிப் பகிஷ்கரிப்பு தொடர்பாக பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமை ச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா வுடன் கலந்துரையாடப்பட்டதும் குறிப் பிடத்தக்கது. (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



படைப்பு,தொடக்கமும் முடிவும்இல்லாதது என்று வேதங் கள் போதிக்கின்றன. பிரபஞ்ச சக்தியின் மொத்தளவு என்றும் ஒரே அளவில் தான் இருக்கிறதென்று விஞ்ஞா னம் நிரூபித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.அப்படியானல் பிரபஞ்சத்தில் ஒன்றுமே இருந்திராத ஒரு காலம் இருந்தி ருக்குமானல் இப்போது காணப்படும் சக்தி அனைத்தும் எங்கிருக்கிறது? அது கடவுளிடம் ஒடுக்க நிலையில் இருந்தது என்று சிலர் கூறுகிறார்கள். அப்ப டியானல் கடவுள் சில காலம் ஒடுக்க நிலையிலும் சில காலம் இயக்க நிலை யிலும் இருக்கிறார் என்றாகிறது.அதாவது கடவுள் கடவுள் மாறக்கக் கூடிய தன் மையர்.மாறக்கூடிய பொருள் கூட்டுப் பொருளாத் தனித்திருக்க வேண்டும். எல்லாக் கூட்டுப் பொருள்களும் அழிவு என்னும் மாறுதலை அடைந்தே தீர வேண்டும்.எனவே கடவுள் இறந்து விடுவார்.என்றாகிறது.இது அபத்தம். ஆகையால் படைப்பில்லாதிருந்த காலம் ஒரு போதும் இருந்ததில்லை.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நல்லவர் ஒருவராக நாமிருப்போம் பலருக்கு வாழ்வு கொடுப்போம்(யோ:11:45–57)

"இனம் முழுவதும் அழிந்து போ வதை விட ஒரு மனிதன் மட்டும் மக்க ளுக்காக இறப்பது நல்லது என்பதை நீங்கள் உணரவில்லையா"(யோ 11: 50)தலைமைக் குரு கயபாவின் இவ் வறிக்கை ஒரு இறைவாக்கு. மெய் யறிவுள்ள ஒரு விவாதம்.உண்மை யின் வெளிப்பாடு ஒரு முன்னறிவிப்பு. தூய பவுல் இதை உறுதி செய்கிறார். "ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அதுபோலவே, எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரை யும் சாவு கவ்விக்கொண்டது"(உரோ 5:12)

ஒரு மனிதனின் பாவத்தால் மனி தன் சிதறினான். நாடுகள் சிதறின. பல மொழிகள் உண்டாயின. பல கலாசாரம் உதயமானது. பல அரசு கள் ஏற்பட்டன. சிதறச் சிதற அன்பு வற்றி அலைந்தான். ஒருமை, ஒற்றுமை அழிந்து தனிமையில் வெந்தான். பய மும் பகையும் பெருகியது. பழியும் பாவமும் பலுகியது.மீட்பின் நிகழ்வு களைக் கொண்டாட இருக்கும் நாம், நமது வாழ்வில் பிறர் வாழ நாம் என்ன செய்கிறோம் என்று நம்மையே கேட்டுக் கொள்வோம். இறைவாக்கினர் எசேக்கி யேலின் "அவர்களை ஒரே நாட்டினர் ஆக்குவேன். அவர்கள் எல்லாருக்கும் ஒரே அரசன் இருப்பான்" "அவர்கள் எனக்கு மக்களாய் இருப்பர். நான் அவர்களுக்குக் கடவுளாய் இருப்பேன்" (எசே 37:23) இயேசு இந்த உலக மாந்தர் அனைவரும் வாழ்வு பெற, மீட்படைய தம்மையே கையளிக்க முன் வந்தார்.

இன்றும் நடைமுறை இதுதான். ஒரு சில நல்லவர்களின் இறப்புத் தான் பலருக்கு வாழ்வைக் கொடுக் கிறது. ஒருவனுடைய தவறான வாழ்வு பலருக்கு அழிவைக் கொண்டுவந் தும் இருக்கிறது. இதுவும் வரலாற்று உண்மையே. நல்லவர் ஒருவரைக் காண்பது இன்று அரிதாக உள்ளது. பொல்லாதவர் கூட்டம் பெரிதாக உள் ளது. பொய் பேசுவோர் பெருகியே வருகிறார். நல்லவர் ஒருவராக நாமி ருப்போம். பலருக்கு வாழ்வு கொடுப் போம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்.

# இந்து கலாசார சமய அலுவல்களின் இணைப்பு செயலாளர்

## எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன்



தற்போது "இந்து கலாசார சமய அலுவல்களின் இணைப்புச் செயலாளராக" ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டிருக்கும் இந்த எம்.ரி. எஸ்.இராமச்சந்திரன் யார்? இவரின் பூர்வீகம் யாது? இவரின் கல்வித் தகைமைகள், ஆற்றல்கள், திறமைகள் என்ன? இவர் இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவதற்கு தகுதி வாய்ந்தவரா? இவை பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இந்து சமயத்தைத் தழுவிய ஒவ்வொரு தமிழ் மக்கள் மனதிலும் எழவேண்டிய ஓர் நியாயமான கேள்வியாகும்.

இக்கேள்விக்கான பதிலாக இச் "சிறு பார்வை" அமைகிறது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தென்மராட்சிப் பிரதேசத்தின் ஓர் அழகிய கிராமம் "வரணி" ஆகும். வரணி இயற்றாலையில் பிறந்த இவர் தனது



ஆரம்பக் கல்வியை வரணி மகாவித்தியாலயத்தில் பயின்று தொழில் ரீதியான உயர் கல்வியை யாழ். மாவட்டத்தின் ஏனைய கல்வி நிறுவனங்களில் பயின்றவர்- சட்ட வல்லுநரான இவர் கடந்த 28 வருடங்களுக்கு முன்னர் ஜேர்மன் நாட்டுக்குச் சென்று அந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றதுடன் உயர் கல்விகளைப் பயின்று பல்வேறு தகைமைகளை தனதாக்கிக் கொண்டார்.

அந் நாட்டின் "முத்துமன் அன்ட் கோறன்புளோ" (MUTHMAN AND GORENFLO) சட்ட நிறுவனத்தின் பிரதம சட்ட ஆலோசகராக கடமை புரிந்து வருகிறார். அகதி அந்தஸ்துக் கோரி ஜேர்மன் குடியுரிமைக்கு விண்ணப்பித்த பல தமிழ் மக்களுக்கு இலவசமான சட்ட ஆலோசனைகள் வழங்கியும், நீதிமன்றங்களில் வாதாடியும் குடியுரிமை மறுக்கப்பட்ட சுமார் 9 ஆயிரம் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை பெற்றுக் கொடுத்தும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார்.

தமிழ்,ஆங்கிலம், ஜேர்மன், இற்றவியன் மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் அதன் வெளிப்பாடாக ஜேர்மனில் ஓர் "தமிழ் அகராதியை" "டொச்" (DEUTCH) மொழியில் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் தனது மொழித்திறமையின் வெளிப்பாடாக இத்தாலிய மொழியிலும் ஓர் தமிழ் அகராதியை வெளியிட்டு தமிழர் என்ற பெருமையையும் குறைந்த வயதில் வெளியிட்டவர் (51வயது) என்ற இரு உலக சாதனையையும் தனதாக்கிக் கொண்டார். இதனால் எமது நாட்டுக்கு பெருமை தேடித்தந்துள்ளதுடன், அந் நாட்டு அரசுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



ஜேர்மனியக் குடியுரிமை பெற்று அங்கு வசித்தபோதும் இவர் கொழும்பில் எம்.ரி.எஸ். இன்டர்நஷனல் லிமிடெட் என்ற பெயரில் (M.T.S-INTERNATION AL (PVT) LTD) ஓர் நிறுவனத்தை ஆரம்பித்து அதன் மூலம் தமிழ்வளர்ச்சிக்கும், கலை மேம்பாடுகளுக்கும் ஊக்கமளித்தார். நமது பாரம்பரிய கலையான பரத நாட்டியத்தை உலகறியச் செய்வதற்காக பரத நாட்டியம் பயின்ற நாட்டிய "தாரகை"களை தெரிவு செய்யும் முகமாக முதன் முதல் இலங்கையில் சர்வதேச ரீதியில் "நாட்டிய மயில்" என்ற போட்டி நிகழ்வை உருவாக்கினார். "நாட்டிய மயில் - 2004" இல் தெரிவு செய்யப்பட்ட நாட்டிய மயிலுக்கு "தங்க கிரீடம்" அணிவித்து ஊக்குவித்தார். இந்நாட்டிய மயிலை சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்த விரும்பி "சர்வதேச ரீதியான ஓர் கலை நிகழ்ச்சியை" உருவாக்கி பரத நாட்டியக் கலையின் பெருமையை சர்வதேச மட்டத்தில் பறை சாற்ற விரும்பிய போது எதிர்பாராத வகையில் ஏற்பட்ட சுனாமி பேரலையினால் பல இடங்களிலும் சோகம் உருவாகியதனால் இந்த நிகழ்ச்சித் திட்டம் இடையில் கைவிடப்பட்டது.

இம்முயற்சியைக் கைவிடாது தொடர்ந்தும் நாட்டிய மயில் 2005 ஐ பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடாத்தி 2005 நாட்டிய தாரகையை தெரிவு செய்து தங்க கிரீடம் அணிவித்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

இதன் பின் "இயுலங்கா போரம்" நிறுவனத்தின் (EULANKA FORUM) தலைவராக நியமனம் செய்யப்பட்டு ஜனாதிபதியின் "புலம்" பெயர்ந்த மக்களுக்கான இணைப்பாளரும், ஆலோசகருமாக தற்போது பணியாற்றி வருகிறார்.


தனித்து M.T.S நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நாட்டிய மயில் நிகழ்வை இயுலங்கா போரம் நிறுவனத்தின் ஆதரவுடன் 2010 இல் யாழ்ப்பாணத்தில் நடாத்தி பரதக் கலையின் சிறப்பினை தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தார்.

மேலும் இயுலங்கா நிறுவனத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்கள் இடம்பெயர்ந்த விதவைக் குடும்பங்களுக்கு சமூக நலத் திட்டங்களையும், கல்வி மேம்பாட்டுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகளுக்கான செயற்பாட்டு பணிமனை 29, பழம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைக்கப்பட்டு செயற்படுகின்றது.

எளிமையான தோற்றமும் இனிமையான சுபாவமும் கொண்ட இவரிடம் "மற்றவர்களுக்கு உதவ வேண்டும்" என்ற மனிதாபிமான பண்பும் அமைந்துள்ளதை நேரடியாக தொடர்பு கொள்பவர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

அண்மையில்




இவரை நேர்காணல் மூலம் தொடர்பு கொண்ட ஓர் பத்திரிகையாளர் கீழ்வருமாறு கேட்டார்.

தங்களின் இந்த உயர்வுக்கு காரணமானவர்கள் யார்? என்று கேட்டபோது

எனது உயர்வுக்கான முழுமையான காரணம் என்னைப் பெற்று வளர்த்த என் "அன்னை" தான். இவர் இன்று என்னுடன் இல்லை. என்னைவிட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்துவிட்டார்.

எனது உயர்ச்சியின் ஓர்சிறு பகுதியை மட்டுமே அவரால் காணமுடிந்தது. இதை நினைத்து நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

அடுத்து எனது குலதெய்வமாக அருள்பாலிக்கும் வரணி சிட்டிபுரம் அம்மாளின் அனுக்கிரகம் இத்துடன் எனது நலனில் அதிகம் அக்கறை கொண்டுள்ள ஒரு சில நண்பர்கள் என்று மிகவும் அடக்கமாக பதில் கூறியுள்ளார்.

அன்று இராமச்சந்திரனை தெரிந்தவர்கள் பலர் இருக்கமாட்டார்கள். இன்று இராமச்சந்திரனை தெரியாதவர்கள் பலர் இருக்கமாட்டார்கள்.

கால் நூற்றாண்டு காலப்பகுதிக்கு மேலாக கிறிஸ்தவ நாடான ஜேர்மனியக் கலாசாரத்தில் ஊறித்திளைத்திருந்த போதும் இந்து கலாசாரத்தை பெரிதாக மதித்து மீண்டும் இலங்கை வந்து இந்து கலாசார சமய அலுவல்கள் பிரிவின் இணைப்பு செயலாளராக இவர் பதவி ஏற்றிருப்பது எமக்கு மிகவும் பெருமையாக உள்ளது.

### சிறுபார்வை

குறிப்பாக வரணிப்பகுதி மக்கள் மிகவும் பெருமைப்படக்கூடியவர்கள். இவர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்கும் என எதிர்பார்ப்பதுடன் ஏனைய சிறிய, பெரிய சைவ ஆலயங்களும் வளர்ச்சியுறும் என எதிர்பார்க்கிறோம்.

சைவநெறி தழைத்தோங்க தமிழ் வளர்த்த சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலத்து ஆன்மீகவாதிகளும் ஆன்மீக நெறிகளும் அருகிவரும் இவ் வேளையில், இளைய தலைமுறையினர் வரிசையில் எம்.ரி. எஸ். இராமச்சந்திரன் போன்றோரின் பிரவேசம் இந்து கலாசார பண்பாடுகளையும், ஆன்மீகக் கோட்பாடுகளையும் மேலும் வளரச் செய்யுமென அனைவரும் எதிர்பார்க்கின்றனர். நம்பிக்கையின் நட்சத்திரமாக தோன்றியுள்ள எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் அவர்களின் இந்து சமயப் பணிகள் தொடர எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை வழங்குவதுடன் அவரின் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கவேண்டியது எமது பாரிய கடப்பாடாகவும் அமைகிறது.

-மேன்மைகொள் "சைவநீதி" விளங்குக உலகமெல்லாம்-

சி.சபாரத்தினம்
அகில இலங்கை சமாதான நீதவான் (வடவரணி), கொடிகாமம்.

(விளம்பர இலக்கம் : சி-2982)

# DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# மக்குலம் -ஜெயவர்த்தனா அதிரடியில்

# கொச்சிக்கு கிடைத்தது முதல் வெற்றி


## சச்சின் சதமடித்தும் மும்பை இந்தியன்ஸ் சோகம்

(மும்பை)

மக்குலம்-ஜெயவர்த்தனா ஜோடியின் அதிரடி இணைப்பாட்டம் கைகொடுக்க கொச்சி தஸ்கர்ஸ் கேரளா அணி தனது முதல் வெற்றியைப் பெற்றது.

சச்சின் டெண்டுல்கர் சதமடித்தும் மும்பை இந்தியன்ஸ் அணி ஏமாற்றம்.

ஐ.பி.எல் தொடரில் நேற்று மும்பையில் நடந்த 13 ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் ஜெயவர்த்தனா தலைமையிலான கொச்சி தஸ்கர்ஸ் கேரள அணியும் மோதின.



இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொச்சி தஸ்கர்ஸ் கேரள அணித்தலைவர் மகேல ஜயவர்த்தனா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு டெண்டுல்கர் - ஜேக்கப்ஸ் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இதில் ஜேக்கப்ஸ் 21 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 12 ஓட்டங்களை எடுத்து கோமிஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ராயுடு களமிறங்க மறுமுனையில் சச்சின் டெண்டுல்கர் 43 பந்துகளில் அரைச்சதம் பெற்றார். இந்த ஜோடியின் அதிரடியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. இதில் ராயுடு 29 பந்துகளில் அரைச்சதம் பெற மும்பை இந்தியன்ஸ் அணி 16.4 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொட்டது.

எனினும் ராயுடு 33 பந்துகளில் (3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பொல்லார்ட் களமிறங்க மறுமுனையில் சச்சின் டெண்டுல்கர் 66 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார்.

இந்நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை எடுத்தது. இதில் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 66 பந்துகளில் (12 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 183 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொச்சி தஸ்கர்ஸ் அணிக்கு மக்குலம்-மஹேல ஜோடி அற்புதமான இணைப்பாட்டத்தை வழங்கினர்.


இந்த ஜோடி மும்பை இந்தியன்ஸ் பந்துவீச்சாளர்களின் பந்துகளை எல்லைக் கோட்டுக்கு விரட்டி அசத்தினர்.

இதில் பிரண்டன் மக்குலம் 41 பந்துகளில் அரைச்சதம் பெற, கொச்சி தஸ்கர்ஸ் அணி 11.4 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 30 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எனினும் மஹேல ஜெயவர்த்தனா 36 பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 56 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜடேஜா அதிரடியாக துடுப்பெடுத்தாட மறுமுனை



யில் மக்குலம் 60 பந்துகளில் (10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 81 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இணைந்த ஜடேஜா - ஹோட்ஜ் ஜோடி அதிரடியைத் தொடர கொச்சி தஸ்கர்ஸ் அணி 19 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 184 ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் கொச்சி தஸ்கர்ஸ் அணி தான் விளையாடிய 3 போட்டிகளில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.


# கலிஸ், காம்பீர் அசத்தல்

# கொல்கத்தா அணி வெற்றி

(ஜெய்ப்பூர்)

கலிஸ்-காம்பீர் ஜோடியின் இணைபிரியாத அதிரடி ஆட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் சொதப்பிய ராஜஸ்தான் றோயல்ஸ் தோல்விகண்டது.



இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற 12 ஆவது லீக் போட்டியில் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைற்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித்தலைவர் காம்பீர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு பௌனிக்கார்-டிராவிட் ஜோடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் பௌனிக்கார் 9 ஓட்டங்களுடன் சகிப் அல் ஹசனின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய மெனாரியா சிறப்பாக ஆட ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை சுமாராக உயர்ந்தது.

இந்த ஜோடி 2 ஆவது விக்கெட்டுக்காக 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது ராகுல் டிராவிட் 34 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களை எடுத்து யூசுப் பதானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வோட்ஷன் களமிறங்க மறுமுனையில் மெனாரியா 21 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களை எடுத்து யூசுப்பதானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரோஸ் ரெய்லர் அதிரடியாக ஆட, ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 14.4 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. இதில் ஷேன் வோட்டின் 13 பந்துகளில் (2 சிக்ஸர்கள் உட்பட) 22 ஓட்டங்களை எடுத்து சகீப் அல் ஹசனின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த போத்தா சோபிக்காத நிலையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 159 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோஸ் ரெய்லர் 25 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 35 ஓட்டங்களையும் போத்தா 12 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன், யூசுப்பதான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 160 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு பிஸ்லா ஒரு ஓட்டத்துடன் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தது அதிர்ச்சியளித்தது.

எனினும் 2 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கலிஸ்-காம்பீர் ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துகளை விரட்டி விரட்டி அடித்து அசத்தினர். இதில் அணித்தலைவர் காம்பீர் 28 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 11.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் ஜக்கலிஸ் 46 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்தினார். இந்த ஜோடியை பிரிக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 18.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 160 ஓட்டங்களைக்குவித்து 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதன் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 3 ஆவது போட்டியில் 2 ஆவது வெற்றியைப் பெற்று தொடரில் 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.

துடுப்பாட்டத்தில் ஜக்கலிஸ் 65 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 80 ஓட்டங்களையும் அணித்தலைவர் கௌதம் காம்பீர் 44 பந்துகளில் (11 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 75 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

இப் போட்டியில் கொல்கத்தா அணித்தலைவர் காம்பீர் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

## இன்றைய ஆட்டங்கள்

சென்னை சுப்பர் கிங்ஸ்
எதிர்
பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
மாலை 4.00 மணி
சென்னை

டெக்கான் சார்ஜர்ஸ்
எதிர்
கிங்ஸ் லெவின் பஞ்சாப்
இரவு 8.00 மணி
ஹைதராபாத்

நகர சபை, யாழ்ப்பாணம்.



# நான் விதவையா? அல்லது சுமங்கலியா?

## ஒரு தமிழ் அன்னையின் கேள்வி இது

(கொழும்பு)

தனது கணவரும், உறவினர்களும் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளமை தொடர்பாக உள்ளூர், சர்வதேச ஊடகம் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களுக்கு ஒரு தமிழ் அன்னை எழுதும் கண்ணீர் மடல் மிகுந்த அவதானத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச- உள்ளூர் ஊடகம் மற்றும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களிடம் ஓர் வேண்டுகோள் என்று எழுதப்பட்டுள்ள இம் மடலில், கொழும்பைச் சேர்ந்த நா.அமிர்தமலர் பெர்னாண்டோ என்னும் தமிழ் அன்னை தெரிவித்துள்ளதாவது,

நாகேஸ்வரன் அமிர்தமலர் பெர்னாண்டோ ஆகிய நான் இன்று விதவையா? அல்லது சுமங்கலியா?. ஏனெனில் இச் சமூகம் என்னைப் பார்க்கும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் என்னை நானே கேட்கும் கேள்வி இது.

நான் இந்நிலைக்கு உள்ளானதற்கு யார் பொறுப்பு. விடை காண யாரிடம் போய் முறையிடுவேன். இதுவரை என் முயற்சிகள் யாவும் கானல் நீராய் போனதே மிச்சம்.

26.03.2008ஆம் திகதி என் வாழ்வில் பேரிடி வீழ்ந்த நாள். வழமைபோல் என் கணவர் தொழில் நிமிர்த்தம் வெளியில் சென்றவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை. இவர் கடத்தப்பட்டாரா? கொலை செய்யப்பட்டாரா? அல்லது ஏதாவது தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா? இதுவரை தெரியவில்லை.

என் கணவரை தேடும் முயற்சியில் என்னால் முடிந்தவரை போராடிக் களைத்துவிட்டேன். பலன் என்னவோ பூச்சியம் தான். இருந்தும் என் முயற்சியைக் கைவிடாமல் தேடல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. என் கணவர் மட்டுமல்ல எனது குடும்பத்தில் ஏற்பட்ட பயங்கர கொடுமைகளைப் பட்டியலிடுகிறேன். இதைப் படித்தபின்னாவது இந்த மனிதவுரிமை அமைப்புக்களின் மனச்சாட்சிக் கண் திறக்கும் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன்.

என் கணவர் காணாமற் போன 26.03.2008 ஆம் திகதி அன்று விடயம் அறிந்ததும் உடனடியாக மோதரப் பொலிஸில் முறையிடச் சென்றேன். ஆனால் அங்கு என் வாக்குமூலம் பெற முடியாது என்று மறுத்துவிட்டார்கள். அதன் பின் 28.03.2008 ஆம் திகதியில் மீண்டும் மோதரப் பொலிஸ் நிலையம் சென்று என் முறைப்பாட்டைப் பதிவுசெய்தேன். அதன் பின் 05 நாட்கள் கடந்தும் என் கணவர் கிடைக்காததனால் மீண்டும் 03.04.2008 ஆம் திகதியில் மனிதவுரிமை அமைப்பிற்குச் சென்று முறையிட்டேன். அதன் பின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டேன்.

வேதனைகளை வார்த்தைகளால் வடிக்க முடியாது. இதுநாள்வரை நான் படும் துயரத்திற்கு அளவேயில்லை. இத்துடன் என் துயர் நின்றுவிடவில்லை. விதியோ, சதியோ என்னையும் என் குடும்பத்தையும் விரட்டிக்கொண்டேயிருந்தது.

இப்படியான தொடர்க் கேள்விகளுக்கு விடைகாண முடியாமல் அல்லும் பகலும் அனலிடை மெழுகாய் உருகுவதை சம்பந்தப்பட்டவர்களோ, சட்டத்தின் காவலர்களோ அறியமாட்டார்கள் என்பது என் உறுதி. ஏனெனில் என்னைப் போன்ற எத்தனையோ பெண்கள் விதவையா? சுமங்கலியா? என்ற நிலையில் இருப்பதை கடந்த சில வருடங்களுக்கு முன் ஐ.நாவின் மனிதவுரிமைகளுக்கான சிறப்புப் பிரதிநிதி திருமதி லூயிஸ் அம்மையாரிடம் முறையிட வந்திருந்த கூட்டத்தையும் பார்த்துத் தெரிந்து கொண்டேன்.

ஒரு கூட்டத்தில் கூட்டத்தினரின் அழுகுரலையும் சிறு பிள்ளைகளின் கையிலிருந்த அவர்களின் தந்தையின் புகைப்படங்களையும் கண்டுகொண்ட லூயிஸ் அம்மையார் கண்ணீர் விட்டதையும் மறுநாள் பத்திரிகையைப் பார்த்தபின்பு உள்ளூர் பெண்கள் அமைப்பும், சிறுவர்உரிமை பேசும் அமைப்புக்களும் பேசாமடந்தையாய் இருப்பதை பார்க்கும் போது நம் தேசமதில் மனிதம் மரணித்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றன.

பெண்கள் இந் நாட்டின் கண்கள் என்ற வாசகம் பொறிக்கபட்டால் மட்டும் போதுமா? அது நடைமுறை வாழ்க்கையில் காணும் போதே உண்மையான சமுதாயம் மலரும். என் பார்வையில் இதுவரை நியமிக்கப்பட்ட எந்த ஆணைக்குழுவின் இறுதி முடிபில் குற்றவாளி தண்டிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. (கிரிசாந்தி குமாரசுவாமி படுகொலை தவிர) வேலியே பயிரை மேயும்போது என்னைப் போன்ற பெண்களின் தேடல் தொடர் தேடல்களாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. (ச-5)

# இலங்கை குறித்த...

இலங்கையில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டும் வகையில் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை குறித்து அவர் அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவிற்கு அனுப்பியுள்ள தீர்மானத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தீர்மானத்தில் நான்கு முக்கிய விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிற்கு நிபுணர்கள் குழு கையளித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தி போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் கடமைப்பாட்டை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என அத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை ஆகியன கூட்டாக இணைந்து இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்கவேண்டும் எனவும் இத் தீர்மானத்தில் அவர் பரிந்துரைத்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கு அந்நாட்டின் மீள் கட்டுமானம் மற்றும் தேசிய நல்லிணக்கம் ஆகியன முக்கியமானவை என அவர் தனது தீர்மானத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, தொண்டு நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களை இலங்கையில் சுதந்திரமாகச் செயற்பட இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் எனவும் மைக்கல் கிறிம் தனது தீர்மானத்தில் பரிந்துரைத்துள்ளார். (ச-5)

# மின்கம்பத்துடன் மோதி...

லுள்ள புடைவைக் கடை ஒன்றில் பணிபுரியும் இவ் இருவரும்யாழ்ப்பாணத்திற்கு வந்து திரும்பிக்கொண்டிருந்த போதே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இந்நிலையில் ஒருவர் அங்கு உயிரிழந்தார். மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடம்மாற்றப்பட்டார்.

இவரின் நிலையும் மோசமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ்விடத்தில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் படுகாயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹயஸ் வான்- மோட்டார் சைக்கிள் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் தொண்டைமானாற்றைச் சேர்ந்த விவேகானந்தன் நந்தகோபால் (வயது-48) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். (ச-6,24,35,61)

# தேர்தல் அண்மிக்கும்...

ஆகும். வேட்புமனு சமர்ப்பிக்கும்போது தமது சொத்து விபரத்தையும் கட்டாயம் வெளியிட வேண்டும். தற்போது இது கட்டாயமாக்கப்படவில்லை

சகல கடசித் தலைவர்களும் வேட்பாளர்களும் தேர்தலின் ஆரம்பத்திலேயே தேர்தல் பிரசாரம் தொடர்பில் ஒழுக்கக் கோவையை கடைப்பிடிப்போம் என சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளரும் அதே தொகுதி அல்லது வட்டாரத்திலுள்ள வாக்காளர்களால் முன்மொழியப்பட்டு வழிமொழியப்படவேண்டும். இதன் மூலம் எங்கோயிருந்தெல்லாம் வரும் முன், பின் கேள்விப்பட்டிராதவர்கள் எல்லாம் வேட்பாளராகக் கொண்டுவரப்படும் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். தேர்தல் முடிந்தபின்னரே தேர்தல் ஆட்சேப மனுக்கள் ஏற்கப்படவேண்டும். இதனால் தேவையில்லாமல் வழக்குகளை தாக்கல் செய்து தேர்தலைக் குழப்பமுடியாது போகும். இந்த ஆலோசனைகளை பங்குபற்றிய 32 கமிட்டி அங்கத்தவர்களும் ஏற்றுக்கொண்டனர். இந்த ஆலோசனைகள் படிப்படியாக தேர்தல் சட்டத்தில் சேர்க்கப்படும் என அமைச்சர் குணவர்த்தன கூறினார். (ச-5)

# ஆட்கடத்தலில் ஈடுபட்ட...

மூவரையும் கடத்த முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் கடிதத்தை பெற்றுத் தருவதாகவும் அதன் மூலம் அற்புதராசாவின் சகோதரனான அப்புத்துரை அனந்தராஜ் வெளிநாட்டுச் சலுகையைப் பெறமுடியும் எனக் கூறியே இவ்வாறு பணமோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை அற்புதராசாவினால் கொடுக்கப்பட்ட 30 ஆயிரம் ரூபாய் பணம் போதாமையினால் இதற்கு குழுவினர் அவரைக்கடத்தப் போவதாகவும் அச்சுறுத்திவந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிமுகமான சிங்களவரான துசார என்பவரினால் பல முறை ஆட்கடத்தல், அச்சுறுத்தல் விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட மூவரும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் வாகனச்சாரதியாக யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த குறித்த நபர் பணம் பெறும் நோக்குடன் ஆட்களை கடத்த முற்பட்ட சம்பவம் சங்கானைப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதோடு, பயங்கரவாத அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுதவிர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மேற்படி நபர்களால் தமது உயிருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது பாதுகாக்க வேண்டும் எனவும் யாழ். இராணுவ மக்கள் தொடர்பு பணிமனையில் நேற்று மாலை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு சம்பவம் தொடர்பாக கருத்துரைத்தவர்கள் தெரிவித்திருந்தனர். (ச-6)

# பசிலிடம் அதிகாரம் கை...

விடயத்தில் அதிகம் பேரை கெடுத்துக் கொள்ளாததே அதற்கான காரணம் என்றறிய முடிகிறது.

அதன் பிரகாரம் அவரை ஜனாதிபதி பதவியில் அமர்த்தவும் அந்த நாடுகள் விருப்பம் கொண்டுள்ளன. அதற்கான இராஜதந்திர ரீதியிலான கலந்துரையாடல்களும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் விடயங்கள் பற்றிய தகவல்கள் கசிந்தவுடன் ஜனாதிபதி மகிந்த கடும் கோபம் கொண்டுள்ளதாக அறியமுடிகிறது. அமைச்சர் பசில் ராஜபக்ஷவை மாத்திரம் அன்றி அவருக்கு நெருக்கமானவர்களையும் கடுமையாகப் பழிவாங்குவதில் அவரும் பாதுகாப்புச் செயலாளரும் கைகோத்துக்கொண்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. (ச-5)

# ஐ.நாவுக்கு எதிராக கருத்து...

பிரதியை ஒப்படைத்திருந்தது.

இந் நிபுணர்கள் குழுவின் அறிக்கை ஆதாரமற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு உடனடியாகவே குற்றம் சுமத்தியிருந்ததுடன் அரசாங்கத்தின் தரப்பில் இவ் அறிக்கை தொடர்பில் பதிலளிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தது. இந் நிலையில் இந் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராகவும், அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் கருத்துக்களை வெளியிடும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு நன்கொடை என்னும் பெயரில் பணம் வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள இச் செய்தியில் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவிக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா ஒரு கோடி ரூபாவும், மாகாண சபை உறுப்பினர்களுக்கு தலா 75இலட்சம் ரூபாவும் நன்கொடையாக வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு உத்தர விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையைக் கண்டித்து கட்டுரைகளை எழுதும் தனிப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கும் நன்கொடைகளை வழங்குமாறு கோத்தபாய ராஜபக்ஷவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்கொடை எனும் பெயரில் வழங்கப்படும் இக் கொடுப்பனவுகளை பாதுகாப்பு அமைச்சின் இரகசியக் கணக்கில் பதிவு செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கூறியுள்ளதாகவும் இச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேமதாச, ஜோன் அமரதுங்க, தயாசிறி ஜெயசேகர, சஜீவ சேனசிங்க, புத்திக பத்திரன மற்றும் கபீர் காசிம் போன்றவர்களிடம் இருந்தும் கருத்துகளைப் பெற்று வெளியிடுமாறு அரச ஊடகங்களுக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள் வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.